ரூ. 8.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்



குருமகாசந்நிதானம் திருவள்ளுவர் விருது ஏற்றுக்கொள்ளல்

திருவள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி – தை
சனவரி 2016

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



இரத்தினகிரி - வேலூர்
மாவட்ட மாநாடு - 4-1-2016
மான்புமிகு தருன்விஜய் -
தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளுடன்
குருமகாசந்நிதானம்

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2047 மாதம் : மார்கழி - தை

மணி : 31 இதழ் : 12, 1

தித்திக்கும் பொங்கல் திருநாள்

தை முதல் திருநாள், பொங்கல் திருநாள்! உழவர் வாழ்வு செழிக்க வேண்டிய உன்னதத் திருநாள்!

தைப் பொங்கலின் முதல் திருநாள் - போகித் திருநாள்! போக்கித் திருநாள்!

இல்லத்துக் குப்பை, கூளங்களைத் தூய்மை செய்யும் நாம் இதயத்துக் குப்பைகளைத் தூய்மை செய்கின்றோமா? ஆசை, கோபம், பொறாமை முதலிய குணங்கள் நம்மிடம் இருந்து விடை பெற்றுள்ளதா?

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

என்றார் திருவள்ளுவர்.

உள்ளத்தில் ஓடும் அழுக்கு ஆறு எந்தப் புனித நீரில் தூய்மை செய்தாலும் நம்மை விட்டு நீங்காது.

எது அழுக்கு ஆறு? என்ன தன்மையது? இதோ ஓர் உதாரணம்.

நண்பர்களாகப் பழகிய இருவர். ஒருவருக்குக் கண்பார்வை இல்லை. இன்னொருவருக்கு நடக்க இயலவில்லை. கண்பார்வை இல்லாதவர் நடக்க முடியாதவரைத் தூக்கிச் சுமப்பார். நடக்க இயலாதவர் கண்பார்வை இல்லாதவர் தோள்களில் அமர்ந்து வழிகாட்டுவார். இப்படி இருவரின் வாழ்க்கைப் பயணமும் உருண்டு

ஓடியது. இருவரின் நட்பின் ஆழத்தை, அன்பை அறிந்த இறைவன் இருவர் முன்பும் தனித்தனியே தோன்றி இரண்டு பேருக்கும் இரண்டு இரண்டு வரம் தர முடிவு செய்தார்.

முதலில் கண்பார்வை இல்லாதவரைப் பாராட்டி, "உனக்குப் பிடித்த இரண்டு வரங்களைக் கேள். தருகிறேன்" என்றார்.

"இறைவா! கண்கள் இல்லையானால் எவ்வளவு கஷ்டம்? அதை என் வாழ்வில் நான் புரிந்து கொண்டேன். எனக்கு அவசியம் கண்கள் வேண்டும். விழிகளில் ஒளி வேண்டும்" என்றார் கண்பார்வை இல்லாதவர்.

"அப்படியே ஆகட்டும்" என்றார் இறைவன்.

கண்பார்வை இல்லாதவர் கண்களைப் பெற்றார்.

"இரண்டாவது வரம் கேள். தருகிறேன்." என்றார் இறைவன்.

"எனக்கு கண்கள் இல்லை என்பதைக் குறை கூறி எப்போதும் என்னைத் திட்டிக் கொண்டிருப்பான் என் நண்பன். அதனால் கண்கள் இல்லாத துன்பத்தை அவன் உணர, அவன் கண்களை இழக்கச் செய்யுங்கள்" என்றார் கண்பார்வை இல்லாதவர்.

"அப்படியே ஆகட்டும்" என்றார் இறைவன்.

இப்பொழுது நடக்க இயலாத நண்பரைச் சந்தித்தார் இறைவன்.

நடக்க முடியாதவரைப் பார்த்து, இரண்டு வரங்கள் கேட்குமாறு சொன்னார்.

"கால்கள் இல்லை என்றால் மிகக் கஷ்டம். கடவுளே! எனக்குக் கால்களைத் தாரும்" என்றார் நடக்க இயலாதவர்.

இறைவனும் அவருக்குக் கால்களைத் தந்தார்.

"இரண்டாவது வரம் என்ன வேண்டும்?" என்று கேட்டார் இறைவன்.

"கால்கள் இல்லை என்றால் எவ்வளவு கஷ்டம் என்பதைக் கண்கள் இல்லாத என் நண்பன் தெரிந்து கொள்ள வேண்டும். அவன்தான் அடிக்கடி எனக்குக் கால்கள் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டிக் கொண்டே இருப்பான். கால்கள் இல்லாத கஷ்டத்தை அவன் உணர அவனுக்குக் கால்களை இழக்கச் செய்ய வேண்டும்" என்றான்.

"அப்படியே ஆகட்டும்"என்றார் இறைவன்.

கண்களை இழந்தவர் கண்களைப் பெற்று, கால்களை இழந்தார்.

கால்களை இழந்தவர் கால்களைப் பெற்று, கண்களை இழந்தார்.

மீண்டும் கண்பார்வை இல்லாத, கால்கள் இல்லாத இணையர்கள் இணைந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டது.

நாம் பெறுவதை விட பிறரின் இழப்பைத் தான் நாம் பெற்றதாக எண்ணி மகிழ்ச்சி அடைகின்றோம்.

அந்த அழுக்கை மனதில் இருந்து வெளியேற்ற வேண்டும்.

தைப் பொங்கலின் இரண்டாம் திருநாள் தைப் பொங்கல் திருநாள்.

மார்கழி மாதம் முழுவதும் பனிக்காலம் மட்டும் அல்ல; பக்திக் காலமும் தான். பாவையர் (பெண்கள்) திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களைப் பாடி, ஊன் உருக, உயிர் உருகப் பிரார்த்திப்பர்.. தங்களுக்கு நல்ல கணவன் வேண்டி இருக்கும் நோன்பு அது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது நம்பிக்கை. எப்படிப்பட்ட கணவன் அமைய வேண்டும் என்று திருவெம்பாவை பாடலில் பெண்கள் பாடுகின்றனர்?

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்

என்று பெண்கள் இறைவனின் தொண்டரைத் தான் தங்கள் தலைவனாக ஏற்றுக் கொள்வோம் என்று பாடுகின்றனர்.

இறைமையின் பண்பு தியாகம்.

உலகம் வாழ வாழ்வது. உயிர்க்குலம் வாழத் தன்னையே தியாகம் செய்வது தான் இறைமைப் பண்பு. அதே பண்பு இறைவனின் அடியவர்களுக்கும், தொண்டர்களுக்கும் உண்டு என்பதால் அப்படிப்பட்டப் பண்பு உள்ளவர்களைத் தான் எங்கள் கணவராக ஏற்றுக் கொள்வோம் என்று பெண்கள் பாடுவதாக அமைந்துள்ளது இத்திருப்பாடல்.

உலக வாழ்வு எப்படி உள்ளது?

"*அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை*" என்றார் திருவள்ளுவர். அந்த இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இல்வாழ்க்கை இன்று அமைந்துள்ளதா?

காதலால் இணைந்த இரு இணையர்கள் கணவன், மனைவியாக இல்லறம் தொடங்கினார்கள். அந்த மணமக்களை ஆசீர்வதித்து மணமகளின் தாய் இருவரின் பெயரும் இணைந்திருக்குமாறு பொதுக் கணக்கு ஒன்றை வங்கியில் தொடங்கி அதைப் பரிசுப் பொருளாய்த் தந்தார். இரண்டு பேரும் மகிழ்ச்சியான தருணங்களில் எல்லாம் சேமிக்குமாறு அறிவுறுத்தினார். மகிழ்ச்சியும் சேமிப்பும் இணைந்து இருக்கட்டும் என்று நினைத்தார் அந்தத் தாய்.

91/1

கணவன், மனைவி வாழ்வில் சில ஆண்டுகளில் கசப்பு ஏற்பட்டது.

உறவின் விரிசல் பிரிவில் கொண்டு போனது. பிரியத் தீர்மானித்தனர்.

"இரண்டு பேரும் சேர்ந்து தொடங்கிய வங்கிப் பொதுக் கணக்கில் அவர் அவர் இட்டப் பணத்தைத் தனித்தனியே எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் மணமகளின் தாய்.

கணவன் வங்கிக்குச் சென்று வங்கிக் கணக்கை முடித்துவரப் போனான். அவனுக்கு இன்ப அதிர்ச்சி.

கணவன் மகிழ்ச்சி அடையும் தருணங்களில் எல்லாம் மனைவி கணவனின் மகிழ்ச்சிக்காக வங்கியில் பணம் செலுத்தி இருந்தாள்.

மனைவி மகிழ்ச்சி அடையும் தருணங்களில் எல்லாம் கணவன் மனைவியின் மகிழ்ச்சிக்காக வங்கியில் பணம் செலுத்தி இருந்தான்.

இருவரும் மற்றவர் மகிழ்ச்சியைத் தங்கள் மகிழ்ச்சியாகக் கருதி உள்ளனர். வங்கிக் கணக்கை முடிக்க வந்த கணவன் இருவரும் இணைந்து வாழ்வதற்காக என்று வங்கிக் கணக்கில் புதிதாக ரூ. 50,000 - செலுத்தி வந்தான்.

வாழ்க்கை என்பது புரிதலில்தான் இருக்கின்றது. இன்பத்தில், துன்பத்தில், சுகத்தில், துக்கத்தில், நன்மையில், தீமையில், ஏற்றத்தில், இறக்கத்தில் பின்னிப் பிணைந்து, நெகிழ்ந்து மகிழ்ச்சியாக வாழ்வது தான் வாழ்வு! அந்த வாழ்வை வாழும் இல்லங்கள் என்றும் சர்க்கரைப் பொங்கலின் தித்திப்பைக் காணும். தைப் பொங்கலின் அடுத்த திருநாள் - மாட்டுப் பொங்கல் திருநாள்!

காளைகளைப் போற்றும் உழைப்புத் திருநாள்.

"*உழுத நோன் பகடு அழி தின்றாங்கு*" என்று புறநானூறு பேசும்.

காளைகள் நமக்காக கழனிகளில் உழைக்கின்றன. மண்ணைப் பொன்னாக்கி, நெல்மணிகளைத் தந்து விட்டு, நாம் ஒதுக்கும் கழிவாகிய வைக்கோலைத் தான் உண்கின்றன. அதனால் தான் தவம் செய்யும் காளைகள் என்று புறநானூறு பாடுகிறது.

பற்றற்ற உழைப்பின் அடையாளமாக விளங்கும் காளையைத்தான் (நந்தி) சிவபெருமான் வாகனமாக ஏற்றுக் கொண்டுள்ளார். எருதுக் கொடியைத் தான் சிவபெருமான் ஏற்றிப் பிடித்துள்ளார். பற்றற்ற உழைப்பின் அடையாளமாகிய காளைகளைப் போற்றுவோம்.

நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

விவசாயத்திற்கு மழைநீர் ஆதாரம். மழைதான் நம்மை வாழவைக்கும் அமிழ்தம் என்றார் திருவள்ளுவர்.

நம் முன்னோர்கள் நீர் ஆதாரங்களைப் பேணிக்காத்தனர். குளங்கள், கண்மாய்கள், ஏரிகள், ஆறுகள் தான் நம் நீர் ஆதாரங்கள். எல்லா ஊர்களிலும் கோயில்கள். கோயில்கள் முன்பு திருக்குளங்கள்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

என்பதைப் போல கோயில் திருக்குளங்கள் அனைத்தும் மக்களின் தேவைக்குப் பயன்பட்டது. நமது குன்றக்குடியில் நாற்புறமும் நான்கு பெரிய குளங்கள் உண்டு. மருதாபுரிக் குளம், சரவணப்பொய்கைத் திருக்குளம், குடிதண்ணீர்க் குளம், வையாபுரிக்குளம் என்று மக்களின் தேவைகளை நிறைவு செய்து கொண்டிருக்கின்றன. மன்னர்களும், செல்வந்தர்களும் ஏரிகளை, குளங்களை வெட்டினர். கரிகாலன் கட்டிய கல்லணை பொறியியலும், அறிவியல் தொழில்நுட்பமும் வியக்க வைக்கும் திருப்பணி! அரும்பணி!

தமிழகத்தில் கம்பம் பகுதி மக்கள் பொங்கல் திருநாளைப் பென்னிக்ுக் என்ற ஆங்கிலேயப் பொறியாளர்க்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பொங்கல் வைத்து கொண்டாடுகின்றனர்.

பென்னிகுக் ஆங்கிலேயப் பொறியாளர் முல்லைப் பெரியாறு நீர்த் தேக்கத்தை எழுப்பித் தந்தது சாதனையின் சிகரம். அணையைக் கட்டத் தொடங்கும் பொழுது சாலைப் போக்குவரத்து வசதி இல்லை. மின்சார வசதி இல்லை. அடர்ந்த காட்டுப் பகுதியில் அணை கட்டும் பொழுது திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மடிந்த பணியாளர்கள் ஏராளம். விஷ வண்டுகளின் தாக்குதலால் பலியானோர் ஏராளம். காட்டு விலங்குகளுக்குப் பலியானோர் ஏராளம். காலரா கொள்ளை நோய்க்கு நூற்றுக்கணக்கில் பலியாகினர். மடிந்தவர்களை அந்த இடத்திலேயே புதைத்து விட்ட சோகங்கள் ஏராளம். இவ்வளவு துன்பங்களுக்கு இடையிலும் அணையின் பணி முழுவதும் நிறைவு அடைந்தது. இரண்டு முறை வெள்ளப்பெருக்கு அணையை உடைத்தது. திட்டத்தைக் கைவிடுமாறு ஆங்கிலேய அரசு பென்னிகுக்கிற்கு ஆணையிட்டது.

பென்னிகுக் இங்கிலாந்து சென்று தன் சொந்தச் சொத்துக்களை விற்று அணையைக் கட்டினார். கண்ணீராலும், செந்நீராலும் எழுப்பப்பட்ட நீர்த் தேக்கம்தான் பென்னிகுக்கின் முல்லைப் பெரியாறு நீர்த் தேக்கம். தொலைநோக்குப் பார்வையோடு கண்மாய்கள், ஏரிகள், குளங்கள், நீர் வரத்துக்கால்கள் போன்ற நீர் ஆதாரங்களை பேணிப்பாதுகாக்க வேண்டும். இப்பணி இன்றைய அவசர அவசியத் தேவை ஆகும். நீர் ஆதாரங்களுக்கு ஆதாரம் மழை! மழைக்கு ஆதாரம் மரங்கள்!

விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது
என்றார் திருவள்ளுவர்.
மழை மரங்களுக்கு தருவது உயிர்ப்பு!
மரங்கள் மழைக்குத் தருவது பிறப்பு!

பூமியைப் பசுமை ஆக்குவது மூலம் தான் புவி வெப்பமயமாதலைத் தடுக்கலாம். ஓசோன் ஓட்டை ஆபத்தில் இருந்து உலகத்தை காப்பாற்றலாம். தாவரங்கள் நமக்கு மழை தரும் வரங்கள்.

ஜோத்பூர் மாவட்டத்தில் கேஜர்லி என்ற இடத்தில் கி.பி. 1730ம் ஆண்டில் 363 பெண்கள் அம்ரிதாதேவி என்ற பெண்ணின் தலைமையில் கேஜ்ரி மரங்களைக் காப்பாற்ற ஒன்று கூடினர். அன்று அந்த நாட்டு அரசர் கேஜ்ரி மரங்களை வெட்ட ஆணை இட்டு இருந்தார். 363 பெண்களும் மரங்களை வெட்ட வரும்பொழுது மரங்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு எங்களை வெட்டிய பிறகு மரங்களை வெட்டுங்கள் என்றனர். மனிதக் கோடரிகளுக்கு இரக்கம் இல்லை. அந்தப் பெண்களை வெட்டி விட்டு மரங்களை வெட்டினர். அந்த மகத்தான தியாகமே சிப்கோ இயக்கத்திற்கு வழி வகுத்தது.

பிறந்தோம்! தொட்டில் மரத்தின் உபயம்!
நடந்தோம்! நடைவண்டி மரத்தின் உபயம்!
எழுதினோம்! பென்சில் பேப்பர் மரத்தின் உபயம்!
மணந்தோம்! மாலைகள் சந்தன மரத்தின் உபயம்!
எரிந்தோம்! எரிந்தோம்! இறுதியில் இடுகாட்டில் எரிந்தோம்!
எரியும் விறகுகள் மரத்தின் உபயம்!
மரம்தான் எல்லாம் மரம்தான்
ஆனால் மறந்தான்! மறந்தான்! மனிதன் மறந்தான்!

என்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் வைர வரிகள் எவ்வளவு நிதர்சனமானவை.

பிறப்பு முதல் இறப்பு வரை நம்மை வாழவைக்கும் மரங்களை நாம் வாழவைக்க வேண்டும். நச்சுக் காற்றைத் தூய்மை செய்து உயிர்க்காற்றைத் தந்து நம்மை வாழவைக்கும் மரங்களை நாம் வளர்க்க வேண்டாமா?

நம் திருக்கோயில்களில் தல விருட்சங்கள் இருந்தன. ஊர்களே வனங்களாய் இருந்தன. வனங்களே நமது வளம்! அதை நாம் பேணிப் பாதுகாப்போம்.

பொங்கல் பொங்குகின்றது. பொங்கலோ பொங்கல் என்று பொங்குகின்றது.

பொங்கல் பொங்கும் மண்பானை மண் தந்த கொடை!
நெல் மண் தந்த கொடை!
கரும்பு மண் தந்த கொடை!
மஞ்சள் மண் தந்த கொடை!
வாழை மண் தந்த கொடை!

மண்ணைத் தோண்டினால் (உழுதால்) நெல்மணியாம் பொன்மணி கிடைக்கின்றது.

உழைக்கும் மக்களை மகிழ வைக்கும் நிலமகள் ஒன்றும் இல்லை என்று உழைக்காமல் கைகளைக் கட்டிக்கொண்டு இருப்போரைப் பார்த்து எள்ளி நகையாடுகின்றாள்.

இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.

வியர்வைக்கு வெகுமதி தரும் வெற்றித் திருநாளில் மண்ணை வளப்படுத்துவோம்.

மண்ணகத்தைப் பசுமை ஆக்குவோம்.

உழைப்பைப் போற்றுவோம்.

உழைப்பைப் போற்றும் எல்லா நாட்களும் தித்திக்கும் பொங்கல் திருநாளே!

அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்.

என்றும் வேண்டும் இன்பம் அன்பு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

தயிரில் பொரு மத்து!

செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்கு ஏற்பத் திறம் வேண்டும். பணிகளின் பாங்கிற்கேற்பத் திறமை இருந்தாலே தலைமை, நிலை நிற்கும். மாணிக்கவாசகர் சிவன் எம்பிரானைப் போற்றிப் புகழ்ந்து பாடுகின்றார். நீத்தல் விண்ணப்பத்தில் ஒரு பாடலில் தன் குறையை இரண்டு வரிகளிலும் இறைவன் புகழை நான்கு வரிகளிலும் பாடுகின்றார். ஏன்?

பிறவிக் கடலை நீந்தவேண்டுமே! நீந்திக் கரையேற வேண்டுமே! அதுவும் சாதாரணக் கடலா? பெருங்கடல்! அந்தக் கடலில் மலங்கள் ஐந்தின் சுழல்! அதில் சிக்கிக் கொண்டு மத்திடை அகப்பட்ட தயிர் போல் சுழலும் தன்னை இறைவன் கைவிடாமல் எடுத்தாள வேண்டுமே என்ற கவலையில் பாட்டுப் பிறக்கிறது.

சிவன், எம்பிரான், மேரு மலையையே வில்லாகக் கொண்டு போர் செய்தவன். அத்தகு பெரியோனுக்குத் தன்னை ஆளுதல் மிக மிக எளிமையான ஒன்று. அது மட்டுமா? இறைவன் கொன்றை மாலை அணிந்திருக்கின்றான். சிவபெருமான் அணிந்துள்ள கொன்றை மாலை அவனே உலகிற்கு முதல்வன் - தலைவன் என்பதனை உணர்த்துகின்றது. தலைவனாக விளங்குபவன் தன்னைச் சார்ந்தாரை எடுத்தாளாமல் கைவிடுதல் அழகன்று என்று உணர்த்தும் பாங்கறிக. கொன்றை மாலை ஓங்கார பிரணவ வடிவமாயுள்ளது. ஓங்காரம் வேதம் முதல் அனைத்துக் கலைகளுக்கும் முதலாகும். ஓங்காரத்தின் பொருள் சொல்லத் தெரியாமல் நான்முகன் வாங்கிய குட்டை, நினைவில் கொள்வது நல்லது. இந்த உலகத்தின் முதல் ஒலி "ஓம்"! இந்த உலகத்தின் முதல் எழுத்து "ஓம்"! இறைவனே ஓங்கார வடிவினன். சிவலிங்கத் திருமேனியில் பீடம் (ஆவுடை) விந்து, இலிங்கம் நாதம் என்று சாத்திரம் கூறும். நாம் ஏதாவது எழுதத் தொடங்கினால் பிள்ளையார் சுழி போடுகிறோம். அதுவும் ஓங்காரம்தான். விந்து பக்கத்தில் நாதவடிவை இட்டு எழுதுதல் பிள்ளையார் சுழி. அ+உ+ம்+=ஓம் ஆயிற்று. இறைவா, சிவனே!

ஆன்மாக்களின் வாழ்க்கைப் பயணத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டவனே நீதானே! பிள்ளையார் சுழி போட்டு வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கி வைத்த இறைவன் அந்தப் பயணத்தை இனிதே முடித்து வைக்க வேண்டாமா? காத்தருள வேண்டமா? "ஓம்" என்றால் காப்பவன் என்பது பொருள் அல்லவா? என்றெல்லாம் வினாக்கள் எழுகின்றன. இறைவனுடைய கொன்றை மாலையைச் சிந்திக்கும் பொழுது!

இறைவன் தனக்குவமை இல்லாதவன். தமிழ் மறையும் "தனக்குவமை இல்லாதான்" என்று கடவுளைப் போற்றுகிறது. அப்பரடிகள் "உவமன் இலி" என்றார். நபிகள் நாயகமும் "கடவுளுக்கு உவமையாக – ஈடாக எதையும் கூறக்கூடாது" எனறார். ஆம், கடவுளே தனக்குவமையில்லாதவன். கடவுளுக்குத்தான் பிறப்பில்லை; இறப்பில்லை; வேண்டுதல் இல்லை; வேண்டாமை இல்லை; எல்லைகள் இல்லை. ஆதலால், கடவுள் தனக்குவமை இல்லாதவன். தனக்குவமை இல்லாதவனாக இருப்பதனால் என்னை எடுத்தாளுதல் எளிது. சிவன் எம்பிரான் தனக்குவமையில்லாதவனானாலும் மேருவை வில்லாகக் கொண்டவன். ஆயினும் எனக்கு எளியவன்; தண்ணளியிற் சிறந்தவன். தாமரைக்காடு அனைய திருமேனியுடையவன். இவ்வளவு சிறப்புக்களும் உடைய இறைவன் என்னை எடுத்தாளாமல் விடக்கூடாது!

நான் ஐந்து மலங்களின் சுழலில் கிடந்து உழல்கின்றேன்; கரையேறுவது தெரியாமல் தத்தளிக்கிறேன். ஆணவம் என்னைக் குருடாக்குகிறது; இருட்டறையில் கிடத்தியிருக்கிறது. மூலையில் முடக்கிப் போட்டுவிட்டது.

ஆன்மாவுக்கு ஆணவம் ஓர் அழுக்கு. அதனாலேயே ஆணவமலம் என்ற வழக்கு வந்தது போலும்! ஆன்மாவுக்கு ஆணவத்துடன் உள்ள சம்பந்தம் அநாதியானது. ஆணவ மலம் ஆன்மாவைச் சிற்றறிவு உடையதாக்குகிறது. சிறு தொழில் உடையதாகச் செய்கிறது. ஆன்மாவைச் சிறுமைத் தனம் பொருந்திய நிலையதாக்குவது ஆணவத்தின் இயல்பு. ஆன்மாக்கள் தோறும் ஆணவத்தின் பந்தம் கூடும்; குறையும். இயல்பாக ஆன்மாவுக்கு அறிவு உண்டு; தொழில் உண்டு. ஆயினும் ஆன்மா ஆணவத்துடன் கலந்திருந்ததாலே ஆணவம் அறிவை மறைத்துவிட்டது. தொழிலையும் மறைத்துவிட்டது. இருளிடைப்பட்ட கண், ஒன்றையும் காணாது. அதுபோல இருள் மலமாகிய ஆணவத்தின் வயப்பட்ட ஆன்மாவின் நிலையும் ஆனது; அதனால்

ஆன்மா தன்னையும் காண இயலவில்லை; தன்னுடைய தலைவனையும் உணர இயலவில்லை. இது ஆணவத்தின் மூல நிலை. ஆன்மா திருவருட் துணையால் பிறவி எடுத்து வினைகள் இயற்றும்போது ஆன்மாவின் ஆணவம் கேடே செய்கிறது. ஆன்மா வினைகள் இயற்றும்போதும் இன்ப துன்பங்களை நுகரும்போது "நான் செய்கிறேன்", "நான் நுகர்கிறேன்" என்று எண்ணி செருக்கடையச் செய்கிறது. இதுவே, ஆணவத்தினைச் சார்ந்த ஆன்மாவின் நிலை. ஆணவம், ஆன்மாவை இயல்பாக எப்போதுமே பற்றியிருப்பதால் இதை "மூல நோய்" என்று திருமுறைகள் கூறும். ஆணவம் இருளினும் கொடியது. காரணம் இருள், தன்னைக் காட்டும்; காணக்கூடிய பொருளை மறைக்கும். ஆணவம், தன்னையும் காட்டாது; தன் செயலையும் காட்டாது. ஆணவச் சார்பினால் ஆன்மாவுக்கு அறிவு இல்லாமல் போகிறது; விருப்பமும் இல்லை; செயலும் இல்லை.

ஆன்மா, இனங்கண்டு கொள்ள இயலாமல் ஒடுங்கிக் கிடக்கும்; முடங்கிக் கிடக்கும். ஆன்மாவுக்கு இது கேவலம். அதனால் ஆணவத்துடன கட்டுண்டு கிடக்கும் ஆன்மாவின் நிலைமையை கேவலாவத்தை என்று மெய்கண்ட நூல்கள் கூறும்.

இந்த நிலையில் சிவன் எம்பிரான் கருணையால் ஆன்மா, மாயையிலிருந்து உடலையும் உலகையும் பெற்று வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குகிறது. ஆணவத்தின் ஆதிக்கத்திலிருந்து ஆன்மாவை மீட்க சிவன் – பரம்பொருள் மாயை, கன்மம் என்று இரண்டு கூடுதல் மலங்களைச் சேர்க்கிறான். அதாவது அழுக்குத் துணியை வெளுக்க உவர் மண்ணைச் சேர்ப்பதைப்போல்! மாயை கன்மங்கள் உபசார வழக்காலேயே மலம் என்று கூறப்படுகிறது. மாயை, கன்மம் என்ற மலங்களுடன் சேர்க்கை கிடைத்தவுடன் ஆன்மாவுக்கு விருப்பம். ஞானம், செயல் ஆகிய மூன்றும் அமையும். இந்த நிலைகள் மாறிமாறி வந்து பொருந்தும். இந்த நிலையில் ஆன்மா, அறிவும் தெளிவும் இல்லாமல் நிலையில்லாதவற்றை நிலையாயின போலவும் நிலையானவற்றை நிலையில்லாதன போலவும் எண்ணும். நல்லன தீயனவாகும். தீயன நல்லனவாகும். இது மயக்க நிலை. ஒரு மலமாகிய ஆணவத்துடன் கூட்டுநிலை இருள்மல நிலை. மாயை, கன்மம், ஆணவம் ஆகிய மும்மலத்துடன் கூட்டு நிலை மருள் நிலை. இந்த நிலைமைகளிலிருந்து ஆன்மா பூரண அறிவுப் பொலிவுடன் விடுதலை அடைய வேண்டும். அதாவது இறவாத இன்ப அன்பு நிலையை அடைதல் வேண்டும். இந்த நிலை அருள்நிலை.

கருமம் - வினைத் தொடர்பு ஆன்மாக்களுக்குக் கிடைத்த பிறகே ஆன்மாக்கள் பிறவி எடுக்கின்றன. அவரவர் செயலுக்கு ஏற்ற பயனைத் துய்க்குமாறு செய்தல் நியதி. துய்த்தலினால் ஆன்மாவின் மலங்கள் கரையும்; மலங்கள் செயலிழக்கும். ஆனால் துய்க்கும் பொழுதும் "நான்", "எனது" என்ற உணர்வுடன் துய்த்தால் பற்றின் காரணமாக மலங்களின் பிடி இருக்கும். இதனால் செத்துப் பிறத்தல் தொடரும். செய்யும் வினைகள் மட்டுமே பிறப்பிற்கு வித்தாகா! செய்யும் செயல்களின் நோக்கமே காரணமாக அமையும். இங்ஙனம் மும்மலம் என்று பேசுவது பெருவழக்கு. மாணிக்கவாசகர் "ஐம்மலங்களிற் கிடந்துழல்வேன்" என்கிறார்.

மாயை, சுத்த மாயை என்றும், அசுத்த மாயை என்றும் இருவகைப்படும். அசுத்த மாயையின் காரியம் மாமேயம் எனப்படும். மாமேயம், கால தத்துவம் முதல் நிலம் ஈறாக உள்ள தத்துவங்களும் உலகங்களும் உலகத்துப் பொருள்களும் இவற்றால் வரும் போகமும் ஆகும். திரோதானம் ஐந்தாவது மலம். சிவசக்தியே திரோதான சக்தியாகத் தொழிற்படுகிறது. திரோதான சக்தியே (மறைக்கும் ஆற்றல்) ஆன்மாவுக்கு மலங்களின் செயற்பாட்டைப் பக்குவப்படுத்தி உய்திச் சாதனைகள் (மலபரிபாகம்) ஏற்படத் துணை செய்கிறது. இதுவும் மலம் என்று உபசாரமாகக் கூறப்பெறும். இவ்வைந்து மலங்களும் உயிர்களை - ஆன்மாக்களைப் பொருந்தி இயக்குகின்றன. இந்த நிலையில் ஆசைகள், விருப்பு வெறுப்புக்கள், இன்பங்கள் துன்பங்கள் ஆகியவற்றில் உழலும் நிலையை "ஐந்து மலங்களில் கிடந்து உழல்வேன்" என்றார்.

மாணிக்கவாசகரின் அனுபவம் மலங்களின் ஆற்றல் அடங்கிய நிலை; ஒடுங்கிய நிலை; உய்யும் நெறியில் செல்லும் நிலை. ஆன்மாவில் வந்து பொருந்தும் குலம் களையப் பெற்றுவிட்டது; குற்றங்களும் களையப்பட்டுவிட்டன. இவையிரண்டும் அற்ற நிலையே நன்னிலைதான்! ஆயினும், நிறைநலம் சார்ந்த பக்குவம் அல்ல. அதனால் மாணிக்கவாசகர் தன்னைக் கைவிடாது அருள்பாலிக்கும்படி வேண்டுகின்றார். என் மலங்களின் ஆற்றல் வலியது. ஒரு சிறு இடுக்கில் கூட நுழைந்துவிடும். பழக்கவாசனை பொல்லாதது. அதனாலேயே பழக்கம் தவிரப் பழகுமின் என்றார்கள்.

இறைவனே! சிவனே! அனைத்துயிர்களுக்கும் மங்கலம் செய்பவனே! ஆணவத்திலிருந்து என்னை மீட்டு எடுப்பாயாக! என்னை ஆணவம் இயல்பாகப் பற்றியது! நானும் ஆணவத்துடன் இரண்டறக் கிடந்துழல்கின்றேன்! இறைவா நீ, என்னை ஆணவத்திலிருந்து மீட்க மாயையை விளக்காகக் கொண்டு அந்த ஒளியில் கரையேறுமாறு பணித்தனை! ஆனால், நானோ மாயையில் கட்டுண்டு அதுவே சொர்க்கம் என்று கிடந்துழல்கின்றேன். சாதனத்தைச் சாத்தியம் என்று எண்ணி மயங்கிக் கிடக்கின்றேன். எந்த ஒரு தீமையும் நன்மையின் வழியிலேயே மறையும்; மறைய வேண்டும். இது நியதி. அதனால் நீ எனக்கு நல்வினைகள் செய்தலுக்குரிய அறியும் கருவிகள் – செய் கருவிகளைத் தந்தருளினை. ஆனால் நானோ தீவினையே பெருக்கி வாழ்கின்றேன்! இறைவா உன்னுடைய திருவருட் சக்தியே என் பொருட்டுத் திரோதான சக்தியாக உருக்கொண்டு மறத்தல் செய்யினும் நான் நினைவுப் புலனை மேலும் ஆழமாக இயக்கி மறக்க வேண்டியவற்றை மறக்காமல் வன்கண்மை கொண்டு வல்வினை செய்து வாழ்கின்றேன். ஆக, நான் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதனம் ஆகிய ஐந்து மலங்களின் சார்பில் சிக்குண்டு உழல்கின்றேன். மத்திடை அகப்பட்ட தயிர்போல உழல்கின்றேன்! தயிர் – ஆன்மா! மத்து – ஐம்புலன்கள்! இறைவா, கன்மத்தின் வழி வினைவழி வந்த மிகப் பெரிய பொல்லாங்காகிய குலத்திலிருந்து என்னை மீட்டாய்! குலம், பிறப்பு – இஃது ஒரு தீச்சுற்று! இதிலிருந்து என்னை மீட்ட பெருமானே என்னைக் குற்றங்களிலிருந்தும் மீட்டாய்! என்று பேசுகிறார். குற்றம், ஆன்மாவின் புலன்களால் செய்யப்படுவது. அகக்கருவிகளைச் சார்ந்தது குற்றம். குறைகள் பொறிகள் வயப்பட்டவை. இறைவன் மாணிக்கவாசகரைக் குற்றங்களின்றும் மீட்டெடுத்துவிட்டான்! குற்றங்கள் இல்லையேல் குறைகள் இரா! குறைகள் இல்லா நிலையில் குற்றங்கள் இல்லாமல் போகலாம். ஆனால் உறுதியாகக் கூறமுடியாது. அதனால்தான் மாணிக்கவாசகர்,

"களைந்தாய் என்னைக் குற்றம்"

என்று பாடுகின்றார்.

சிவனே! எம்பிரானே! என்னைக் குலத்திலிருந்து விடுபடச் செய்தனை! என் குற்றங்களைக் களைந்தாய்! இந்த நிலையில் என்னை

முற்றாக எடுத்தாளுவாய்! மேருவை வில்லாக வளைத்த உனக்கு இது கடுமையான பணியல்லவே! உலகத்திற்குத் தலைவனாக விளங்கும் நீ, என்னை - அடைக்கலம் புகுந்த என்னைக் கைவிடலாமா? தனக்குவமை இல்லாத தலைவனே! ஐந்து மலங்கிடந்து உழலும் என்னை எடுத்தாண்டு கொள்க! என்று நெக்குருகப் பாடுகின்றார்.

குலங் களைந் தாய்; களைந் தாய் என்னைக்
குற்றம், கொற்றச் சிலையாம்
விலங்கல் எந் தாய்விட் டிடுதிகண்
டாய்! பொன்னின் மின்னு கொன்றை
அலங்கல் அந் தாமரை மேனியப்
பா! ஒப்பி லாதவனே!
மலங்கள் ஐந் தாற் சுழல் வன்தயி
ரில்பொரு மத்துறவே!

- (நீத்தல் விண்ணப்பம் - 29)

தமிழறிஞர். **தமிழண்ணல் மறைவு**

தமிழறிஞர் தமிழண்ணல் (இராம. பெரியகருப்பன்) அவர்கள் 29.12.2015இல் மதுரையில் காலமானார். இவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணி செய்த பெரும் பேராசிரியர். தமிழே தம் உயிர்மூச்சாகக் கொண்டு தமிழ்வழிக் கல்விக்காகப் போராடியவர். பல்வேறு தமிழ் அமைப்புகளில் இருந்து தமிழ் வளர்ச்சிப் பணிகள் ஆற்றியவர். சிறந்த கவிஞர்; 80க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியவர். இப்பெருமகனார் குன்றக்குடி ஆதீனம் நடத்தும் வள்ளல் பாரி விழாவில் அருள்நெறித்தந்தை அவர்களால் “கணக்காயர்” விருது பெற்றவர். செம்மொழி நிறுவனத்தின் “விருதான தொல்காப்பியர் விருது” இந்தியக் குடியரசுத் தலைவரால் தரப்பெற்றவர். மேலும் பல விருதுகளும் பெற்ற பெருமைக்குரியவர். இப்பெருமகனாரின் மறைவு தமிழுலகுக்குப் பேரிழப்பாகும். இவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் மக்கள் சிந்தனை ஆறுதலையும் ஆழ்ந்த இரங்கலையும் புலப்படுத்திக் கொள்கிறது. அவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

- **ஆசிரியர்**

ஒத்தாங்கு ஒறுப்பது?

(புலவர். ஆ. பழனி)

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து

இக்குறள் வெருவந்த செய்யாமை என்ற அதிகாரத்தின் முதற் பாடலாக அமைந்துள்ளது.

வெருவந்த செய்யாமை என்றால் என்ன? ஆட்சித் தலைவனாக இருக்கின்றவன் தன் குடிமக்கட்கு அச்சத்தை ஏற்படுத்தும் செயலையோ, தன்கீழ்ப் பணிபுரிபவர்க்கு அச்சத்தை ஏற்படுத்தும் செயலையோ, தனக்கோ எதிர்காலத்தில் அச்சத்தை ஏற்படுத்தும் செயலையோ, தனக்கே எதிர்காலத்தில் அச்சத்தை உருவாக்கவல்ல செயல்களையோ செய்யாதிருத்தல் என்பதாகும். வெருவந்த என்றால் அஞ்சத்தக்க என்பது பொருளாகும்.

ஒரு வழக்கை அவன் எவ்வாறு கையாளவேண்டும் என்பதை இக்குறள் கூறுகின்றது. வழக்கைத் தக்கவாறு ஆராய வேண்டும்; குற்றவாளியாயின் அவன் மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாதவாறு தண்டனை கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்குங்கால் அத்தண்டனை ஒத்ததாக இருக்க வேண்டும் என்கிறது இக்குறள். எதற்கு ஒத்ததாக இருக்க வேண்டும் என்ற வினாவிற்கு விடைதரும் போதுதான் உரையாசிரியர்கள் முரண்படுகின்றார்கள்.

பரிமேலழகர் குற்றத்திற்கொப்பத் தண்டனை வழங்க வேண்டும் என்கின்றார். குற்றவாளிக்குத் தக தண்டனை வழங்க வேண்டும் என்கின்றாரும் உண்டு. பெரும்பாலும் குற்றத்திற்குத் தக என்பதையே எல்லா உரையாசிரியர்களும் உடன்படுகின்றனர். ஆனால் மணக்குடவர் மட்டும் வேறுபட்ட உரையைக் கூறுகின்றார். ஒத்தாங்கு ஒறுத்தல் என்பதற்கு "உலகத்துப் பொருந்துமாறு ஒறுத்தல்" என்கின்றார்.

குற்றத்திற்குத் தக தண்டனை வழங்குதல் என்பது குற்ற வழக்குகளின் இயல்பான நடைமுறைதான். அது மட்டுமன்று. இன்ன வகைக் குற்றத்திற்கு இத்தகைய தண்டனை வழங்க வேண்டும் என்பதை நீதி நூல்கள் வரையறுத்தும் வைத்துள்ளன. அந்தப் பாலபாடத்தைப்

படித்தவர்கள்தான் வழக்குமன்றத் தலைமைக்கு வருகின்றார்கள். ஆதலின் "குற்றத்திற்குத் தக" என்பது அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை. ஒரு ரூபாய் திருடியவனுக்கு மரணதண்டனையா வழங்குவார்கள்.

ஆகவே மணக்குடவர் உரை நம் ஆய்வுக்கு உரியதாகின்றது. "உலகத்துக்கு ஒப்ப ஒறுத்தல்" என்பது. மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது தெளிவின்றித்தான் உள்ளது. உலகம் என்பது எதைக் குறிக்கின்றது. இப்படி எல்லாம் வினாக்கள் தோன்றலாம். இதற்கெல்லாம் ஒரே மருந்து நீதி நூலைப் புரட்டுவதுதான். தென்னாட்டவரின் அரசியல் நூலாகிய சுக்கிரநீதியைப் பார்ப்போம்.

"அரசன் நடோறும் உலகியல், நீதிநூல் ஆகிய ஏதுக்களால் சாதிதருமம், தேய தருமம், இரேணிதருமம், குலதருமம் ஆகிய இவற்றை நன்கு ஆராய்ந்துணர்ந்து தன் அரசியல் தருமத்தைப் பேண வேண்டும்"

தேய தருமம், சாதி தருமம், குல தருமமாகிய இவை பண்டு தொட்டு எவ்வாறு நடைபெற்று வருகின்றனவோ அவ்வாறே அவற்றைப் பாதுகாத்தல் வேண்டும். இன்றேல் குடிகள் மிகவும் கலக்கம் எய்துவர்.

அத்தி-4 ப-5. பிர.சூ. 47, 48 சுக்கிர நீதி குறிக்கும் மேற்கண்ட செய்திகளில் சாதி தருமம் என்பது திருவள்ளுவர் காலத்தில் இல்லை. ஆனால் தேய தருமம் (நாட்டு வழக்கு) குலதருமம் (குலவழக்கு) போன்றன அவர் காலத்தில் உள்ளவைதாம். நாட்டு வழக்கையும் குலவழக்கையும் உட்கொண்டு அவற்றிற்கொத்த வகையில் தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்று வள்ளுவர் கருதுகின்றாரோ என்று எண்ண வேண்டியுள்ளது. இவ்வாறு கருதியதால்தான் மணக்குடவர் உலகத்துப் பொருந்துமாறு ஒறுக்க வேண்டும் என்று உரைவகுத்தார் போலும்.

வட இந்தியாவில் சதி என்ற கொடிய பழக்கம் இருந்ததை அறிவோம். கணவன் இறந்துவிட்டால் மனைவியை கணவனை எரிக்கும் சிதையில் தள்ளிக் கொல்லும் கொடிய செயல் அது. பிரிட்டிசார் ஆண்டபோதும் அந்த வழக்கம் இருக்கவே செய்தது. ஆங்கிலேயர் அதனை நாட்டுவழக்கு (தேயதருமம்), குலவழக்கு (குலதருமம்) என்ற அடிப்படையில் அனுமதித்தே வந்தனர். பின்னர் இராசாராம் மோகன்ராயின் முயற்சியால் அது தடை செய்யப்பட்டது என்பது வரலாறு. இதுநாட்டு வழக்கு, குலவழக்கு என்று

ஆங்கிலேயர் கருதியதனால் தான் சிதையில் ஒரு பெண்ணைத் தள்ளிக் கொள்பவர் மீது கொலைக் குற்றம் சாட்டப்படமுடியவில்லை என்னும்போது நீதிமுறையில் நாட்டு வழக்கு, குலவழக்கு போன்றவற்றின் வலிமை எத்தகையது என்பதை அறிய முடிகின்றது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் நடந்த ஒரு மட்டைப்பந்து விளையாட்டின் போது ஒருவர் வீசிய பந்து மட்டை வீச்சாளரின் தலையைப் பதம் பார்த்துக் கொன்றுவிட்டது.இ இதற்காக அந்தப் பந்துவீச்சாளரின் மீது கொலைக்குற்றம் சுமத்தப்படவில்லை ஏன்? இது விளையாட்டு தருமம் என்று எடுத்துக்கொள்ளப்பட்டதுதான். இவை போன்ற தருமங்கள் நீதித்துறையில் இருந்ததனால் தான் மணக்குடவர் ஒத்தாங்கு ஒறுத்தல் என்பதற்கு உலகத்துப் பொருந்த ஒறுத்தல் என்று கூறினார் என அறிய வேண்டுகிறேன்.

இதனை இன்னும் வலிமைப்படுத்துகின்ற வகையில் கம்ப இராமாயணத்துள் வருகின்ற ஒரு நிகழ்ச்சியையும் நாம் பார்க்க வேண்டும்.

இந்திரசித்தின் உடலை இராவணன் தன்மடிமீது கிடத்திப் புலம்பிக் கொண்டிருக்கும்போது அங்குவந்த மண்டோதரி இராவணனை நோக்கி "இன்று நீ இவனை மடிமீது கிடத்திப புலம்புகின்றாய். நாளை நான் உன்னை என் மடியில் கிடத்திப் புலம்புவேன். இதுதானே நடக்கப்போகின்றது" என்று கூறியவுடன் பெருஞ்சினங்கொண்ட இராவணன் தன் வாளை உருவிக்கொண்டு "இப்பொழுதே அவ்வஞ்சகியைக் (சீதையை) கொல்வேன்" என்று ஓடுகின்றான். அப்பொழுது அங்கே வந்த மகோதரன் இராவணன் கால்களைப் பற்றிக் கொண்டு பேசத் தொடங்குகின்றான். இதோ அவன் பேச்சு:

"நிலத்தியல் பன்று; வானோர்
நெறியன்று; நீதி யன்று;
தலத்தியல் பன்று; பேலோர்
தருமமேல் அதுவு மன்று;
புலத்தியன் மரபில் வந்து
புண்ணிய மரபு பூண்டாய்
வலத்தியல் பன்று; மாயாப்
பழிகொடு மறுகு வாயோ"

இராவணா! எந்தக் குற்றமும் செய்யாத ஒரு பெண்ணைக் கொல்வது என்பது நம் நாட்டு வழக்கம் இல்லை. தேவர்களின் நெறிக்கு இது ஒத்ததா என்றால் அதுவுமில்லை. நீதி நூலுக்கு ஒத்ததா என்றால் அதுவுமில்லை; சில குறிப்பிட்ட பகுதிகளில் வழங்குகின்ற குலமரபுக்கு ஒத்ததா என்றால் அதுவுமில்லை. மேலோர்கள் கூறிய அறத்திற்கு ஒத்ததா என்றால் அதுவுமில்லை. இது உனக்கு வெற்றியைத் தருமா என்றால் (புகழைத் தருமா என்றால்) அதுவுமில்லை வேறு எதைத் தரும்? அழியாப் பழியைத்தான் தரும்!)

இங்கே மகோதரன் கூறிய நிலத்தியல்பன்று என்பது நாட்டு வழக்கையும், தலத்தியல்பன்று என்பது குலவழக்கையும் குறித்தமை காண்க. இராவணன் தீர்ப்பில் தேய தருமம் குலதருமமும் இல்லை என்பதைக் காட்டி உன்தீர்ப்பு (முடிவு) மோசமான தீர்ப்பு – பழியைத் தரும் தீர்ப்பு என்கிறான் மகோதரன்.

நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்குகின்றபோது நாட்டு வழக்கையும், குலவழக்கையும் அனுசரித்தே வழங்கவேண்டும். என்பதைச் சுக்கிரநீதியில் கண்டோம். ஆங்கிலேயரின் ஆட்சி முறையிலும் கண்டோம். இதைத்தான் திருவள்ளுவரின் ஒத்தாங்கு ஒறுத்தல் என்பதிலும், மணக்குடவரின் உலகத்துப் பொருந்துமாறு ஒறுத்தல் என்பதிலும் காண்கின்றோம்.

"முத்தமிழ்வேள்" டாக்டர். எம்.ஏ.எம். இராமசாமி செட்டியார் மறைவு

"முத்தமிழ் வேள்" டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி செட்டியார் அவர்கள் 2.12.2015 அன்று சென்னையில் மறைந்தார். தம் செட்டிநாட்டரசர் குடும்ப மரபிற்கேற்ப அவர் கல்விப் பணி, திருக்கோயில் திருப்பணிகள் தமிழறிஞர்களைப் பாராட்டுதல், பலருக்குப் பணி வாய்ப்பு வழங்கல் எனப் பலதுறையிலும் சிறந்து விளங்கிய பெருமகனார். நமது குன்றக்குடி ஆதீனத்தின் குருபூசைவிழாவில் "முத்தமிழ்வேள்" விருது பெற்ற சிறப்பினர். இப்பெருமகனாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் செட்டிநாட்டரசர் குடும்பத்தினருக்கு "மக்கள் சிந்தனை" ஆறுதலையும் ஆழ்ந்த இரங்கலையும் புலப்படுத்திக்கொள்கிறது. அவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

– ஆசிரியர்

தில்லியில் திருக்குறள் விழா!

திருவருள்திரு குருமகாசந்நிதானம்

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கு

திருவள்ளுவர் விருது



உத்திரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் திரு. தருண்விஜய் அவர்கள் நடத்திவரும் திருவள்ளுவர் மாணவர் மன்றங்கள் – இளைஞர் மன்றங்கள் அமைப்பின் சார்பாக தில்லியில் நாடாளுமன்ற வளாக இணைப்புக் கட்டட அரங்கில் 17.12.2015 வியாழக்கிழமையன்று திருக்குறள் விழா நடைபெற்றது. இந்த விழாவில் திருக்குறள் திறனாய்வுப் போட்டியில் தேர்வான மாணவ, மாணவியர் 133 பேருக்கு விருது வழங்குதல், திருக்குறள் தொண்டாற்றிய பெருமக்களுக்கு விருது வழங்குதல் நடைபெற்றது.

மாண்புமிகு மாநிலங்களவைத் துணைத் தலைவர் திரு. பி.ஜே. குரியன் அவர்கள் திருக்குறள் பற்றிப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்கான விருது தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கும், வாழ்நாள் சாதனையாளர் விருது கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கும், திருவள்ளுவர் கலை, அறிவியல் கண்ணோட்ட விருது எழுத்தாளர் ஜோ.டி. குருஸ் அவர்களுக்கும் பத்திரிகை ஆசிரியர் விருது தினமணி ஆசிரியர் கே. வைத்தியநாதன் அவர்களுக்கும் வழங்கிப் பாராட்டிச் சிறப்புச் செய்தார்.

மாண்புமிகு நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. வெங்கைபய நாயுடு, மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திரு. பொன். இராதாகிருஷ்ணன் மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர், திரு. தருண்விஜய், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் திரு. திருச்சி சிவா, திருமதி. கனிமொழி, திரு. டி.கே. ரங்கராசன், திரு. டி. ராஜா, திரு. ராம்கோபால் யாதவ், திரு. முகமது சலீம் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

மாநிலங்களவை உறுப்பினர்கள் திரு. கே.பி.ராமலிங்கம், திரு. கேசவராய் ஆகியோரும் பா.ஜ.க. தலைவர்கள் திரு. எச்.ராஜா, திருமதி. தமிழிசை சவுந்தரராசன், திருமதி. வானதி சீனிவாசன், இந்திய மருத்துவ கவுன்சில் உறுப்பினர் மருத்துவர் எல்.பி. தங்கவேல், திரு. நல்லி குப்புசாமி, மூத்த வழக்கறிஞர் திரு. கே.எஸ். ராதாகிருஷ்ணன், முனைவர் ம. நடராஜன், திரு. ராம. சுப்பிரமணியம், தில்லித் தமிழ்ச்சங்க நிர்வாகிகள் திரு. கே.வி.கே. பெருமாள், திரு.அ.ஜெயமூர்த்தி அகில இந்திய தமிழ்ச் சங்கங்கள் கூட்டமைப்புப் பொதுச் செயலாளர் திரு. இரா. முகுந்தன், இணைச் செயலாளர் திரு. லெ. இராகவன் நாயுடு, பேரா. திரு. அறவேந்தன், தில்லித் தமிழ்க்கல்விக் கழக ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.கலந்தது கொண்ட மாணவ – மாணவியர் அனைவரையும் பாராட்டிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த விழா சிறப்பாக நடைபெறத் துணைநின்றும் விழாவிற்கு முதல் நாள் (16.12.2015) சிறப்பு விருந்தினர்களைத் தம் இல்லத்திற்கு அழைத்துப் பாராட்டிச் சிறப்பித்துப் பெருமை சேர்த்தவர்களும் திரு. எஸ். இலட்சுமி நாராயணன், திருமதி. இலட்சுமி நாராயணன் ஆகியோர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

மேலும் விருது பெற்ற அறிஞர் பெருமக்களை, புதுதில்லிச் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. வி. பாலசுப்பிரமணியன் தமது அலுவலகத்திற்கு அழைத்துப் பாராட்டிச் சிறப்புச் செய்தார்.

செய்தி : **சு. செல்வராஜ்**

ஆன்மாவுடன் ஆன்மா பேசுவதாக எழுத்துப் படைப்பு இருக்க வேண்டும்!

(20-12-2015 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை, காரைக்குடியில் நடைபெற்ற உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கம், சிவகங்கைக் கிளையின் 23-ஆம் ஆண்டு விழாவின்போது, விருதுகளும் பரிசுகளும் வழங்கி, குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆற்றிய பேருரையின் கட்டுரையாக்கம்)

உத்திரகாண்ட் மாநிலப் பாராளுமன்ற உறுப்பினர் பெருமைக்குரிய தருண்விஜய் அவர்கள் நடத்திவரும் மன்றங்கள் சார்பில், கடந்த 17.12.2015ஆம் நாள் புதுடெல்லி நாடாளுமன்ற வளாக இணைப்புக் கட்டட அரங்கில், குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாருக்குத் திருக்குறள் விழிப்புணர்வுப் பணிக்கான சிறப்பு விருது வழங்கப்பட்டது. பெருமைக்குரிய அந்த விருதினைத் தவத்திரு அடிகள், மாணவர்கள், ஆசிரியப் பெருமக்கள் உடன் சூழ்ந்திருக்க, நேரில் சென்று பெற்றுக் கொண்டார்கள். புதுடெல்லி சென்று குறள்விருது பெற்ற பெருமித உணர்வை அரங்கில் அடிகள் பகிர்ந்து கொண்டு தமது உரையைத் தொடங்கினார்கள். "புதுடெல்லிப் பாராளுமன்ற வளாகத்துக்கு, அரசியலாளர்கள் தமக்குரிய அரசியல் அதிகாரத்தோடு செல்வார்கள். நாமும் சும்மா சென்றுவிடவில்லை; நம்மிடமும் 133-குறள் அதிகாரங்கள் இருந்தன; நாமும் பாராளுமன்ற வளாகத்திற்கு அதிகாரபூர்வமாகத்தான் போய் வந்திருக்கிறோம்" என்று அடிகள் தமது உரையைத் தொடங்கியபோது, விழாத் தலைவர் நற்கதைநம்பி அய்க்கண், உள்ளிட்ட அரங்கத்தினர் பலத்த கரவொலி எழுப்பி அடிகளுக்கு வாழ்த்தும் வணக்கமும் தெரிவித்துக்கொண்டனர்.

படைப்பாளர்களையும் சிந்தனையாளர்களையும் நேரில் காணும்போது ஒரு புதிய எழுச்சியும், தொலை நோக்கும், களிநடம் மேவிவர மகிழ்வது திருமடத்தின் பாரம்பரிய உணர்வாகும். எழுத்தாளர் சங்க விழாவில் கவிஞர். காசிஸ்ரீ அரு.சோ.பொற்கிழிக் கவிஞர் மீனவன், சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற இளம் எழுத்தாளர்கள், ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள் என்று அறிவார்ந்த குழுவினரைக் கண்டு மகிழ்ந்த தவத்திரு அடிகள், தமது பேருரையை, எழுத்தின் நோக்கம், கல்வியின் நோக்கம், பொருட் செல்வம் அருட்செல்வமாக மடைமாற்றம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஆகியன குறித்து மிகவிரிவாக உரை நிகழ்த்தினார்கள்.

"ஓர் எழுத்தாளருக்கு, படைப்பாளருக்குச் சமுதாயப் பொறுப்பு இருக்கிறது; மொழிவழிப் பொறுப்பு இருக்கிறது; பண்பாட்டு நெறியைப் பேணி வளர்க்கும் பொறுப்பும் இருக்கிறது; இவை அனைத்தையும் சுட்டிக் காட்டி நமது எழுத்தாளர் சங்கம் தொடர்ந்து இயங்கி வருகிறது. ஒரு வகையில் நமது எழுத்தாளர்களைச் சர்க்கரைப் பொம்மையாக உருவகிக்கலாம்; அவர்கள் களிமண் பொம்மையாக இருந்துவிடக்கூடாது; களிமண் பொம்மையாக இருந்தால் சமுதாய நீருக்குள் பிசுபிசுத்துப்போய்விடுவார்கள்; அவர்கள் பஞ்சுப் பொம்மையாகவும் இருந்துவிடக்கூடாது; அப்படி இருந்தால் தண்ணீரை உறிஞ்சி உப்பிப்போய் விடுவார்கள். மாறாக, அவர்கள் சர்க்கரைப் பொம்மையாக இருந்து சமுதாயத்தோடு சமுதாயமாகக் கலந்து கரைந்து சுவையும் பயனும் ஊட்டவேண்டும். அவ்வாறு பயன் ஊட்டிச் சமுதாயத்தை மேன்மைப்படுத்த வேண்டும். நமது எழுத்தாளர்களின் படைப்புக்கள் கசடுகளை, அழுக்குகளை நீக்கிச் சமுதாயத்தைத் தூய்மைப்படுத்துவதாக அமைய வேண்டும். "துணிவெளுக்க மண் உண்டு; தோல்வெளுக்கச் சாம்பல் உண்டு; மணிவெளுக்கச் சாணை உண்டு; மனம் வெளுக்க வழியில்லையே, எங்கள் முத்துமாரி" என்று நமது மகாகவி பாரதி பாடினார். ஆனால், மனம் வெளுக்க வழி ஒன்று உண்டு; அந்த வழிதான் எழுத்தாளர்களின் எழுத்துப்பணி; படைப்புப் பணி. எழுத்தாளர்கள் தமது படைப்புக்கள் வழியே சமுதாய மனங்கள் தூய்மைபெறப் பாடுபடவேண்டும்.

எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள் என்றால் அவர்கள் சிந்திக்கிறார்கள் என்று பொருள்; அவர்கள் சிந்திப்பதும், செயல்படுவதும் எந்தத் தடையுமில்லாமல் தொடர்ந்து நிகழ்வதாக அமைய வேண்டும். அவர்களது சிந்தனையும் செயல்பாடும் மரணத்தின்பேரதுதான் தடைபடும். அதனால்தான் காரல்மார்க்ஸ், லெனின் போன்ற பெருமக்கள் மரணம் அடைந்தபோது, "அவர்கள் இறந்துவிட்டார்கள்" என்று அறிவிக்கப்படவில்லை; மாறாக, "அவர்கள் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்கள்" என்றே அறிவிக்கப்பட்டது. இத்தகைய பதிவு யாருக்குச் சொல்ல முடியும்? யார் தொடர்ந்து வாழ்நாள் முழுதும் சிந்தித்துக் கொண்டே இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் சொல்ல முடியும். அப்படித்தான் நமது எழுத்தாளர்கள் தொடர்ந்து சிந்திக்க வேண்டும்; படைக்க வேண்டும்.

அத்தகைய சிந்தனை, அத்தகைய எழுத்து, படைப்பு எப்படி இருக்க வேண்டும்? ஓர் ஆன்மா, இன்னொரு ஆன்மாவோடு பேசுவதாக இருக்க

வேண்டும்; நிகழ்காலச் சமுதாயம் எதை உள்வாங்க வேண்டும் என்று உணர்த்திக் காட்டுவதாக இருக்க வேண்டும்; வள்ளலார் காட்டியதுபோல வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி அன்பு செய்யும் மனம் வேண்டும் என்பதை உணர்த்துவதாக இருக்க வேண்டும்; நமக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த வாழ்க்கையானது, வழங்கி, வழங்கி பிறருக்குக் கொடுத்துக் கொடுத்து மகிழ்வதற்காக என்று உணர்த்துவதாக இருக்க வேண்டும். பொருட்செல்வம் அருட்செல்வமாக மாறுதல் அடைய வேண்டும் என்பது வள்ளுவம் காட்டும் நெறி. பொருளைச் செல்வச் செவிலி என்றும் அந்தச் செவிலி அருள் என்னும் குழவியை வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் வள்ளுவர் நெறி காட்டுகிறார்; இந்த நெறியை, இந்தப் பொருளியல் நெறியை, இந்தச் சமுதாய நெறியை நமது எழுத்தாளர்கள் உணர்த்திக்காட்டி எழுதவேண்டும்; இந்தத் திசைநோக்கி எழுத்தாளர்கள் எழுதுவதற்கு, படைப்பதற்கு நமது சங்கம் ஆண்டுதோறும் சிறப்பாகச் செயல்படுவது அறிந்து மகிழ்ச்சியடைகிறோம், வாழ்த்துகிறோம்!"

- மு. பழனி இராகுலதாசன்

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்

திருவண்ணாமலை ஆதீனம் - குன்றக்குடி

குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார்

அவர்களுக்கு வாசித்தளித்த போற்றிப்பா.

(19.12.2015 சிந்தனை நந்தவனம் நிகழ்ச்சியின்போது)

தில்லியிலே திருக்குறளின் பெருமை சேர்த்து
தெள்ளுதமிழ்க்குறள் அறிஞர் விருது பெற்றாய்
நல்லதமிழ் உரைவீச்சு உந்தன் பேச்சு
நாவார மனமாரப் போற்று கின்றோம்
உள்ளுதொறும் உளம்களிக்கும் உந்தன் பேச்சு.
உள்ளுறையோ வள்ளுவனார் உரை குறட்பா
வல்லவராய் ஆதீனம் காத்து வென்றாய்
வள்ளுவனார் உரைபரப்பால் உயர்ந்து நின்றாய்
பல்லறிஞர் தமிழ்நாட்டில் பரந்து றைவார்
பாரதத்தின் தலைநகரம் நீயே சென்றாய்
உள்ளம் "பொன் அம்பலத்து அடிகாள்" தாங்கள்
உயர்குறளின் புகழ்பரப்பி உயர்ந்தீர் அய்ய
வள்ளலெனும் திருமுருகன் வாழ்த்தும் பெற்றாய்
வண்டமிழர் நெஞ்சமெலாம் வசியம் செய்தாய்
வள்ளுவனார் திருவருளாம் வரமும் பெற்றாய்
வடநாட்டார் "தருண்விஜயால்" போற்றப் பெற்றாய்
எல்லோரும் உமை வாழ்த்தும் இனியகாட்சி
இன்பொதிகை தொலைக்காட்சி இனிதே காட்ட
உள்ளமெலாம் பூரித்து உவந்தேன் அய்யா
உளமார வாழ்த்துகின்றேன் அடிகாள் போற்றி.

- புலவர். **ஆறு.மெ. மெய்யாண்டவன்**

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

- ஆசிரியர்

மழை வெள்ளத் துயர் துடைப்புப் பணியில் நமது ஆதீனம்



திசம்பர் மாதம் முதல் வாரத்திலிருந்து தொடர்ந்து பல நாள்கள் தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், கடலூர், நெல்லை, தூத்துக்குடி முதலிய மாவட்டங்களில் பெய்த விடாத பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். பல்லாயிரம் ஏக்கர் பயிர் நிறைந்த கழனிகள் நாசமாயின. வீடுகள் ஆயிரக்கணக்கில் தரைமட்டமாகியும், இடிந்தும் பாழ்பட்டன. தமிழக மக்கள் பட்ட பெருந்துயரம் அளப்பரியது. குடிதண்ணீருக்கும், குழந்தைகளுக்குப் பாலும், உண்ண உணவின்றியும், படுக்கவும் இருக்கவும் ஒதுங்கவும் இடமின்றியும் உற்றாரை, உறவினரை, பெற்றோரை, மக்களை இழந்த மக்கள் அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் வெள்ளம், மழை வெள்ளத்தோடு கலந்து பெருகி தமிழகத்தின் பல மாவட்டங்களை மூழ்கடித்துவிட்டது. இவ்வாறு மக்கள் பட்ட துயர் துடைப்புப் பணியில் அரசும், பல்வேறு அரசியல் கட்சிகளும், தொண்டு நிறுவனங்களும், தொழில் நிறுவனங்களும், ஆதீனங்களும், சமய நிறுவனங்களும் பெருமக்கள் பலரும் பங்கேற்று பணிபுரிந்தனர். இந்த மாபெரும் தொண்டில் இணைந்து கொள்ளும் வகையில் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் சார்பாக துயர் துடைப்புப் பணிக்காக ரூ. 2,50,000/- ரூபாய் இரண்டரை லட்சம் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் திருவருள்திரு மகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் 10.12.2015 ஆம் நாள் வழங்கினார்கள் என்பதை "மக்கள் சிந்தனை" தெரிவித்துக் கொள்கிறது. அதுமட்டுமின்றி துயரவயப்பட்ட மக்கள் அனைவருக்கும் ஆறுதலையும், வருங்கால வாழ்வை எதிர்கொள்ளும் ஆற்றலையும் வழங்கியருளுமாறு இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கிறது.

– ஆசிரியர்

திருநணா - விச்சிமலை

ஓர் ஆய்வுச் சிந்தனை

(தருமையாதீனப் புலவர். த. குருசாமிதேசிகர்)

"திருநணா" - இன்று பவானி என்று வழங்குகிறது. திருஞானசம்பந்தர் பதிகம் பெற்ற கொங்குத் தலங்களில் ஒன்று. "திருநணா" - சங்க காலத்தில் "நன்றா" என்று வழங்கியுள்ளது. பதிற்றுப்பத்து கொங்குநாட்டு வரலாற்றை வெளிப்படுத்தும். அந்நூல் கொண்டு ஆய்ந்த ஆய்வுப் பேரறிஞர். மயிலைசீனி வேங்கடசாமி அவர்கட்கு, வரலாற்றுலகம் மட்டுமின்றி திருமுறை உலகமும் நன்றி செலுத்த வேண்டும்.

நன்றாமலை : செல்வக் கடுங்கேவாழியாதன் சேரரின் மற்றொரு கிளை மரபிற்குரியவன். இவன்மேல் பதிற்றுப்பத்து 7ஆம் பத்து பாடப்பட்டுள்ளது. பாடியவர் கபிலர். இவ்வரசன நன்றாமலை மேலிருந்து கபிலருக்குப் பரிசு வழங்கியுள்ளான். நன்றா என்னும் பெயர் பிற்காலத்தில் நணா என்று மாறி வழங்கிற்று. சம்பந்தர் கொங்குநாட்டுத் திருநணா என்னும் திருப்பதியைப் பாடியுள்ளார். காந்தாரப் பண்ணில் அமைந்த அப்பதிகத்தில் நன்றாமலைவளம், ஆற்றுவளம் கூறப்பட்டுள்ளது.

"ஓட்டந்தருமருவி வீழும் அவ்விசை காட்டமுந்தா ழோசைச்
கேட்டார் மணிகளணியுந்திரை சேர்க்குந் திருநணாவே"
"நன்றாங் கிசைமொழிந்து நன்னுதலாள் பாகமாய்ஞாலமேத்த
மின்றாங்கு செஞ்சடைஎம் விகிர்தர்க் கிடம்போலும்
குன்றோங்கி வன்திரைகள்மோத மயிலாலுஞ் சாரற்செவ்வி
சென்றோங்கி வானவர்களேத்த யடிபணியுந் திருநணாவே"

என்ற திருநணாப் பதிகத்தில் மலை வளமும் ஆற்று வளமும் கூறப்பட்டு, குறிப்பாக "நன்றாங்கிசைமொழிந்து" என்று நணாவின் பழம் பெயரையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இன்று இத்தலம் பவானிகூடல் என்றும், நகரம் "பவானி" என்றும் வழங்குவதை நாமறியலாம்.

பவானி கூடல் : சுவாமி பெயர் சங்கமுகநாதேசுவரர்; தேவியர் வேதமங்கை அம்மை: பவான ஆறு காவிரியாற்றுடன் சேருமிடமாகையால் இந்த இடம் பவானி கூடல் எனப்பட்டது. இப்போது "ஊராட்சிமலை" என்று கூறப்படுவது நன்றாமலையாக இருக்கலாம் என மயிலையார் கருதுவார். பவானி என்ற பெயர் வடமொழி மோகமிக்கிருந்த காலத்தில் வந்திருக்க

வேண்டும். மறைக்காடு வேதாரண்யம், முதுகுன்றம், விருத்தாசலமானதும் அக்காலம்ாகும்.

விச்சிமலை : சுந்தரர் சேரமான் பெருமாளுடன் மலைநாட்டுக்குச் செல்லும்போது – திருவையாறு வழிபடும்போது ஒரு பாடலில், விச்சிமலைச்சாரல் இசை கேட்டு காவிரி பாயும் திருவையாறு என்ற பொருளில் பாடிய குறிப்பு நம் ஆய்விற்குரியதாம். அப்பாடல் :

"மருவிப்பிரியமாட்டேன் நான்
வழிநின்றொழிந்தோர் ஒழிகிலேன்
பருவி விச்சி மலைச்சாரற்
பட்டை கொண்டு பகடாடிக்
குருவியோப்பிக் கிளிகடிவார்
குழல்மேல் மாலை கொண்டோட்டம்
தரவந்திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறுடைய அடிகேளோ"

என்ற பாடற்கு, உரை வழங்கிய பெரியவர் அமரர் திரு. அருணைவடிவேல் முதலியார், விச்சிலை "தினை விதைக்கப்பட்டமலைச்சாரல்" என்றும், "விச்சிய" என்றதன் ஈறு தொகுத்தலாயிற்று என்றும், விச்சுதல் – வித்துதல்: இதற்குச் செய்யப்படுபொருள் "வருவிக்கப்பட்டது" – என்றும் வழங்கியிருப்பது விச்சிமலையை அறியாது வழங்கிய உரையாகும். சேக்கிழார் "கொங்குநாடு கடந்துபோய்க் குலவு மலைநாட்டெல்லை" சென்றார் என்று பதிவு செய்து கொங்கு நாட்டுப் பச்சை மலை என்னும் விச்சிமலை அடங்கியிருப்பது, காவிரிவரும் வழி குறிப்பிடப்பட்டது சுந்தரரால். இது பற்றி மயிலையார் ஆய்ந்து எழுதிய வாசகங்கள் போற்றத்தக்கவை.

விச்சிமலை நாடு : சங்க காலத்துக் கொங்கு நாட்டிலே இருந்த ஊர்களில் விச்சி என்பதும் ஒன்று. பச்சை மலை என்று இப்போது பெயர் உள்ள மலை, அக்காலத்தில் விச்சிமலை என்று பெயர் பெற்றிருந்தது. சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் விச்சிமலை உள்ளது. இந்த மலை, ஏறக்குறைய 200 மைல் நீளமுள்ளது. இதன் உயரம் கடல் மட்டத்துக்குமேல் ஏறத்தாழ 2000 அடி உயரம் உள்ளது. மலைவளம் மிக்கது. வேங்கை, தேக்கு, கருங்காலி, சந்தனம் முதலிய மரங்கள் உள்ளன. இம்மலைமேல் பலாமரங்கள் இருந்தன என்று கபிலர்

புறநானூற்றில் 200வது பாடலில் கூறுகிறார். விச்சிமலைமேல் "ஐந்தெயில்" என்னும் கோட்டை இருந்தது. அது காட்டரண் உடையதாக இருந்தது. விச்சிநாட்டை அரசாண்ட பரம்பரையாருக்கு "விச்சிக்கோ" என்று பெயர் இருந்தது. பதிற்றுப்பத்து 9ஆம் பத்தில் இளசேரல் இரும்பொறை என்பவன் விச்சிநாட்டைக் கைப்பற்றினான் என்று கூறுகிறது. இவ்விச்சி நாட்டை ஆண்ட விச்சிக்கோ என்ற அரசனிடம் கபிலர் பாரிமகளிர் இருவரையும் மணம் முடிக்க வேண்டியதும், அவன் மறுத்த செய்தியும் புறநானூற்றுச் செய்திகளாகும். பதிற்றுப்பத்தில் இரும்பொறை முற்றுகை இட்டபோது விச்சியரசர்களுக்குப் பாண்டியனும் சோழனும் உதவியாக இருந்தும் "இரும்பொறை" வெற்றி பெற்றதை குறிப்பிடப்படும் செய்தி அறியத்தக்கது.

"வெருவருதானை யொடு வெய்துறச் செய்து சென்று
இருபொரு வேந்தரும் விச்சியும் வீழ
வருமிளைக் கல்லகத்தைந் தெயில் எறிந்து"

என்ற 9ஆம் பத்து விச்சி அரசர் வீழ்ச்சியைக் குறிப்பிடும்.

கொங்குக் காவிரி : காவிரியாறு குடகில் தோன்றி கொங்கு நாட்டு விச்சிமலை வழியா திருவையாறுத் தலத்துக்கு வருகை தருவதைத்தான் சுந்தரர் "விச்சிமலைச்" சாரற்பட்டைகொண்டு "பகடாடி" என்று அருளுகிறார். சுந்தரர் அறிந்த நில நூல் செய்தி வியப்பிற்குரியது மட்டுமன்று. வரலாற்றுப் பெட்டகமாகும். திருநணா – நன்றா என்பதன் மரூஉப் பெயராகவும் கொள்ளலாம். பவானி கூடல் என்று இன்று வழங்குகிறது. பவானி பெண்பாற் பெயராக இன்று பலரும் வைத்துள்ளனர். ஆற்றைப் பெண்ணாக உருவகம் செய்வது தமிழ்மரபு. நன்றா ஆறு –ஆன்பொருநை – முதலிய பெயர்க ளும் பழ ம்பெயராம். தமிழ்ச் சொல்லின் மொழிபெயர்ப்பாக பவானியை எண்ணலாம்? ஆய்வாளர் மேலும் ஆய்க.

திருக்குறளையும், திருவள்ளுவரையும் எந்த வட்டத்திற்குள்ளும் அடக்க முடியாது. இந்த அரங்கத்தில் பகுத்தறிவாளரையும், பாதரக்குடி ஆதீனத்தையும் வந்தமரச் செய்திருப்பது திருக்குறள்தான். திருக்குறள் எல்லாவற்றையும் இணைக்கிறது. அது ஒரு போதும்பிரிப்பதில்லை. உலக அறிஞர்கள் பலர் வார்த்தைகளளால் விளக்கம் தந்திருக்கிறார்கள். ஆனால் வாழ்க்கையால் விளக்கமளித்தவர் வள்ளல் அழகப்பர். மனித குலத்துக்கு எல்லா நிலைகளிலும் ஏற்படும் சிக்கல்களைத்தீர்க்க ஒரே வழி கல்வி கற்பதுதான் என்கிறார் திருவள்ளுவர். மனிதரின் குறைகளை நாளும் அகற்றுவதற்கு திருக்குறள் துணைபுரிகிறது. – தவத்திரு **பொன்னம்பல அடிகளார்**

(திருக்குறள் பன்னாட்டு கருத்தரங்கு உரையிலிருந்து)

கோவை மாட்சி மாநகர் – மாச்சம்பாளையம்
அருள்மிகு மாரியம்மன் திருப்பதிக மாலை
கட்டளைக கலித்துறைப்பா

(கவிக்கோ ம. இளங்கீரன்)

காப்பு

அரச மரத்தே அனைவோர்க்கும் காவலாய் ஆள்பவனே!
பரமசிவ மைந்த! நின் பாதம் தொழுவார் துயர்களைவாய்!
கரமைந்து கொண்ட கணபதி காப்பென நாடிவந்தேன்;
திறமருள் அம்மை திருப்பதி கப்பா சிறப்புறவே! (1)

நூல்

1. கொங்குத் திருநாட்டில் கோலமிகு நொய்யற் காஞ்சிநதி,
செங்கூத்துப் பள்ளம் மலைச்சாரல் சேர்ந்த குறிஞ்சிநிலம்,
எங்கும் குளம்குட்டை முல்லைத் திணைமயக்கும் நீர்மருதம்,
செங்கரும்பு, செந்நெல் தினைவகை காய்கள் செழிக்குமூரே! (2)

2. பூச்சி புழுவுக்கும் தீங்கிழையார்: போற்றும் புகழுடையார்
மேய்ச்சல் தொழில்செய் இடையர் குறும்பர்கள் வாழிடமாம்
தாய்ச்சொல் அருளால் தகுமொழி நம்பித் தடம்பிறழார்:
ஆட்சிசெய் மக்களும் ஆன்றோர் வழியில்நல் நீதிசொல்வார்! (3)

3. வாய்ச்சொல் தமிழ்மணம் வாய்க்கும், வழிபாட் டிசைமுழக்கம்:
ஆய்ச்சியர் நீர்மோர் அழைத்தே தருவராம் நுங்கிளநீர்!
மேய்ச்சல் குளக்கரை மேலாம் நிலத்தில்வே ளாண்மையுடன்
மாச்சாம்பா ளையத் தெருவெலாம் பால்மணம் வீசிடுமே! (4)

4. சிவனிடம் செம்பாகம் பெற்றுச் சிறந்த பெருமகளே!
நவசக்தி தேவி! நளினத் திருவுரு நாயகியே!
தவத்தினர் உள்ளம் தளர்வுறா வண்ணம்நீ தாங்கியருள்,
தவறெவர் செய்து பிழைக்கினும் நீதடுத் தாண்டருளே! (5)

5. பீச்சும் சுனைநீர்ப் பெருக்கெடுக்கும் கேணித் தேக்கமுடன்,
மாச்சம்பா ளையம்சூழ் மக்கள் வருந்திடா வண்ணமருள்
ஓச்சும் திருவோலக் கக்காட்சி செங்கோல் ஒருகரத்தே
தீச்சுடரும் தாங்கி திரிசூல மேந்தித் திகழ்பவளே! (6)

6. மனையறம் காக்கிறாள் மாதேவி மாட்சிமா பாளையத்தே
எனையாளும் அன்னை திருவடி பற்றி எழுதுவதற்
குனையன்றி யாரையான் உற்ற துணையெனக் கொண்டெழுதத்
தினையள வேனுன் திருவருள் நோக்கம் செலுத்துவையே! (7)

7. வீச்சரி வாள்கள், விரிசுருள்,கத்தி, தடிமரங்கள்
நாச்சொரி தீச்சொல், நடுக்கும் அநீதிக் கொடுமொழிகள்
போச்செனச் சொல்லப் புவியினைக் காத்திடும் மாரியம்மா!
பாச்சுவை இன்குரல் பாவையர் பாட்டிசை கேட்டுவந்தாய்! (8)

8. தூயவள், தாயவள், துன்பம்துயரம் துடைப்பவளே!
மாயவன் கண்ணன், மலரவன் நான்முகன், மாமலையன்
சேயவன் கந்தன், துதிக்கையன், நாமகள், மாமகளார்
ஆயநல் தெய்வம் அனைத்துமாய் ஆனவள் மாரியம்மா! (9)

9. நீச்சல் பழகுவோர் நீந்திக் கரைநின் றெழுவதுபோல்,
ஆச்சி நீ நோன்புத் திருவிழா நாள்களில் ஆண்டுதொறும்,
மூச்சாக நின்று முறையிடு வோர்குறை தீர்ப்பவளாய்,
மாச்சம்பா ளையத்தேர் வந்தருள் ஓம்சக்தி மாரியம்மா! (10)

10. விண்ணில்ஓர் தாடங்கம் வீசி எறிந்தாய்! விரைந்துவந்தே
வெண்ணிலாத் தோன்றும் விளையாடல் அன்றுன் விழியருளே!
கண்ணிறை காட்சி எழில்மாச்சம் பாளைய மாநகரில்
எண்ணங்கள் ஈடேற்றி எல்லார் இதயத் திருப்பவளே! (11)

குருவணக்கம்

கீச்சிளங் கீரனின் கேடெலாம் நீங்கவே நாவிலொரு
பாய்ச்சும் எழுத்தாணி வாசகம் தந்த அரங்கசாமி
வாய்ச்சநல் ஆசிரி யர்கல்வி தந்தநல் மாட்சிநகர்
பேச்சும் எழுத்தும் பெருமையும் சேர்த்திடும் பாளையமே! (12)

நூற்பயன்

ஆளானேன் அம்மா! அடிமலர் சார்ந்தேன் அனைவருக்கும்
நீளாயுள், அன்பு, நிறைசெல்வம், கல்வி, உடல்நலம்சீர்
தாளாண்மை, வெற்றி புகழ்பதவி, மேன்மை, வீரவளம்
கோள்நல்ல நட்பு குடும்பம்நல் வாழ்வும் கொடுத்தருளே! (13)

தமிழ்மொழிக்கு முதலிடம்

10 லத்தீன் (Latin) :

இந்தோ - ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுள் ஒன்றான லத்தீன் மொழி கி.மு. 100-களில் தோன்றியிருக்கலாம்.

9 ஆர்மேனியன் (Armenian) :

இந்தோ - ஐரோப்பிய மொழியாகக் கருதப்படும் ஆர்மேனிய மொழி, கி.மு. 450-களில் தோன்றியிருக்கலாம்.

8 கொரியன் (Korian) :

கொரியன் மொழி கி.மு. 600 ஆண்டளவில் உருவாகியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

7 எபிரோம் (Hebrew) :

இஸ்ரேலில் அங்கீகாரமுள்ள மொழியான, எபிரேய மொழி கி.மு.1000 ஆண்டுகள் பழமையானது என்கிறார்கள்.

6 அராமிக் (Aramic) :

அரபு, எபிரேயம் ஆகிய இரண்டுக்கும் அடிவேராக இருந்த மொழி அராமிக் மொழி. இது. கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முந்தைய காலங்களில் உருவாகியிருக்கலாம்.

5 சீனம் (Chinese)

சீனா மற்றும் அதன் சுற்றுப்பிரதேச மக்களாலும் பேசப்பட்டு வரும் சீன மொழி, கி.மு. 3000-லிருந்து கி.மு. 1200-களுக்கு இடைப்பட்ட காலத்தில் உருவாகி இருக்கலாம்.

4 கிரீக் (Greek)

கிரேக்க நாட்டில் கி.மு. 1450-களில் இம்மொழி உருவாகியிருக்கலாம். ஐரோப்பிய மொழிகளில் மிகப் பழமையான மொழி இது.

3 எகிப்து (Egyptian)

ஆஃப்ரோ-ஆசிய மொழிக் குடும்பத்திலிருந்து உருவான எகிப்திய மொழி, கி.மு. 2600-லிருந்து, கி.மு. 2300-களுக்குள் உருவாகியிருக்கலாம்.

2 சமஸ்கிருதம் (Sanskrit)

இம்மொழி, கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னதாக உருவாகி இருக்கலாம்.

1 தமிழ் (Tamil)

5000 ஆண்டுகளுக்கு முன்பு உருவான இம்மொழி, திராவிட மொழிக் குடும்பத்தின் தாய். 5000 ஆண்டுகளுக்கு முன்பே இம்மொழியில் பல்வேறு இலக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன என்பதே இதன் பழமைக்குச் சான்று. இன்றுவரை உயிர்ப்புடன் இருக்கும் பழமையான மொழிகளில் தமிழ் மொழியே மிகவும் பழமையான மொழி.

நன்றி : புதிய தலைமுறை 3.9.2015

-அனுப்பியவர் : கலைமாமணி நெல்லை.ஆ. சுப்பிரமணியன்)

இணையதள முகவரி : http/www.worldblaze.in/top-10-oldest-languages-in-the-world

எண்பதுக்கு வாழ்த்து

(தமிழாகரர் தெ. முருகசாமி)

அழைப்பைப் பார்த்தேன்
முன்பின் அம்மா!
தழைப்பும் இழப்பும்!
தாவி வந்தன!
"அய்க்கண்" எண்பதா!
என்பதை எண்ணினேன்!
மெய்க்கண் நின்றார்!
மனப்படப் பிடிப்பால்!

கொட்டித் தீர்த்தகன
மழையிலும் கரையாக்
கெட்டிச் சாயக்
குங்குமப் பொட்டு!
மெட்டி ஒலியில்
மேவிய புன்னகை!
ஒட்டி யிருந்தன!
ஓவிய "வசந்தமாய்!"

"மாண்டஎன் மனைவி" -
என்றானே புலவன்!
ஆண்டவ னுக்கும்
அந்நாள் எண்பதோ?
ஈண்டதை எண்ணினேன்!
அய்க்கண் வசந்தமாய்
நீண்டமன மேடையில்
நின்றார்! பழசும் புதுசுமாய்!

—

மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்துள்ள பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான்கல்வியாகும். –விவேகானந்தர்

மார்க்சிய சிந்தனையாளர்.பேராசிரியர். அ. வேங்கடாசலம் மறைவு

மார்க்சிய சிந்தனையாளர் பேராசிரியர் அ. வேங்கடாசலம் கடந்த 26.11.2015ஆம் நாள் காலமானார். இவர் பட்டுக்கோட்டைக்கு அருகில் ஆம்பலாபட்டு கிராமத்தில் வளமான விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் – அண்ணாமலை கல்லூரியில் பொருளாதாரத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தேவகோட்டை விடுதலை வீரர் கே.எம்.எஸ். அவர்கள் அறிமுகத்தோடு பெரியகுருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமகனாருடன் தொடர்பு பெற்று அவர்கள்பால் பேரன்பு செலுத்திவந்தவர். இப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்தம் குடும்பத்தார்க்கு "மக்கள் சிந்தனை" ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

– ஆசிரியர்

கவிஞர். ஏ.டி.எம். பன்னீர்செல்வம் காலமானார்.

திருவண்ணாமலை அன்பர் திரு. ஏ.டி.எம். பன்னீர்செல்வம் அவர்கள் 6.12.2015-இல் காலமானார். இவர் இறை உணர்வும், தமிழ் உணர்வும் தம் இருவிழிகள் எனப்போற்றி வாழ்ந்தவர். நல்ல கவிஞர், சிறந்த அருள்நெறித் தொண்டர். நமது ஆதீன மகாகுருபூசை விழாவில் குருமகாசந்நிதானம் அவர்களால் "கவிஞர்கோ" பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றவர். எல்லாவற்றிற்கும் மேலாக திருவண்ணாமலைத் திருப்பதியில் இருந்து நம் ஆதீனச்சிறப்பு பிரதிநிதியாகப் பல்லாண்டுகள் பணி செய்த பெருமகனார். இவர்தம் மறைவு ஆதீனத்திற்கு இட்டுநிரப்ப முடியாத பேரிழப்பாகும். இவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்தம் குடும்பத்தார்க்கும், அன்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக்கொள்கிறது. அப்பெருமகனாரின் நல்லுயிர் அண்ணாமலை அண்ணலின் திருவடி நீழலில் இன்ப அமைதிபெறப் பிரார்த்திக்கிறது.

– ஆசிரியர்

இளங்கோவின் சேரப் பற்று

(தமிழாகரர் தெ. முருகசாமி)

தமிழ்க் காப்பிய வரிசையில் மணிமுடியாகத் திகழ்வது சிலப்பதிகாரம். இதில் எல்லாமே மூன்று மூன்றாக உள்ளன. அவற்றுள் பெருவழக்காக உள்ளது எதுவெனில் சேர சோழ பாண்டியர் என்னும் முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியதாய்ச் செய்யப்பட்டதாகக் கூறுவது வழக்கமாகும்.

சேர சோழ பாண்டியர்களின் ஒற்றுமையின்மையைக் கருத்தில் கொண்டு அவர்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் குறிப்பில் மூவரையும் ஒருங்கிணைக்கும் கதையாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைச் செய்தார் என்பர். இக்கருத்தை அவராலேயே வெற்றிபெறச் செய்யமுடியவில்லை என்பது ஓரிரு அகச் சான்றுகளால் உறுதிப்படுத்தலாம்.

கானல்வரிப் பாடலைக் கோவலன் முதன் முதலில் பாடும்போது, சோழன், கங்கை தன்னைப் புணர்ந்தாலும் அவன் நாட்டுக் காவிரி புலக்காது எனப் பாடுகிறான். அவ்வாறே கன்னி தன்னைப் புணர்ந்தாலும் காவிரி புலக்காதென்றான். சுட்டப்பட்ட கங்கையும் கன்னியும் வடநாட்டிலும் பாண்டி நாட்டிலும் ஓடும் ஆறுகள்.

இவ்விரு ஆறுகளுக்குப் பின்னர் கோவலன் உழவர் ஓதை மதகோதை எனப் பல்வேறு ஆரவாரத்துடன் ஓடும் காவிரியே எனக் காவிரியைப்பாடினான்.

ஈண்டு ஆற்றுவரிப் பாடல்களாக ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிப் பாடினாலும் பாடும் நிலையில் உள்ள ஒரு முறை பிறழ்ச்சியே இளங்கோவடிகளின் சேரப்பற்றைப் பிரித்துணரச்செய்கிறது.

சோழன் வடநாட்டின் கங்கையையும் பாண்டிநாட்டின் கன்னியையும் புணர்வது போலவே எஞ்சியுள்ள சேரநாட்டின் ஓர் ஆற்றையும் புணர்வதுதானே இயல்பு. குறிப்பாகப் பேரியாற்றைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி என்று பாடவேண்டிய இளங்கோவடிகள் கருத்தை மாற்றிப் பாடுகிறார்? ஏன்?

வடநாடும் பாண்டி நாடும் சோழனுக்கு அடிமையாவது போல் சேரநாடும் அடிமையாகிவிடுவதான நினைப்பு எழாதிருக்கவே காட்சியை மாற்றி உழவர் ஓதை மதகோதை எனக் கோவலன் மூலம் சேரப்பற்றை வெளிப்படுத்திவிட்டார்.

இங்ஙனம் சேரநாட்டில் ஓடும் ஆற்றை மறைத்துப்பாடியதால் யானைக்கும் அடிசறுக்கும் என்றதோடு கூடிய குறைக்கும் இளங்கோ ஆளாகிவிடுகிறார்.

வஞ்சிக்காண்டத்தின் பிற்பகுதியில் முடியுடை வேந்தர்பற்றிய பாடல்களைச் சமமாகப் பாடிப் பரவினாலும் புகார்க் காண்டக்கானல்வரி ஆற்றுவரிப் பாடலில் இளங்கோ சேரப்பற்றைக் காட்டியதென்பது நிலவில் களங்கமானதாகவே உள்ளது. இதனால் முடிகெழுவேந்தர் மூவர்க்குரியதாய் முழுமையும் பாடப்பெறாமல் ஒரோவழி சேரப்பற்றுடன் பாடப்பட்டது என்றே கருதலாம் என்க!

இவ்வாறே மற்றோரிடத்தையும் உணரலாம். பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும் எனக் கணவனிடம் வேண்மாள் கூறியதும் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல்லெடுக்க வடநாடு புறப்படுகிறான். அந்நிலையில் வடக்கிருந்து வந்த முனிவர்கள் கூறியதாக, அங்குள்ள கனகவிசயர் தென்தமிழ் மன்னர்களை இகழ்ந்த சொற்களைக் கேட்டு வஞ்சினம் கூறினான்! காவா நாவால் கனகவிசயர் கூறிய வசைமொழி "எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தரூஉம்" எனச் சோழ பாண்டிய மன்னர்களையும் அரவணைத்த வகையில் கூறி ஒட்டுமொத்த தமிழ்வீரத்தை மூவரின் சார்பில் தான் ஒருவனே காட்டி வெற்றிபெற்று வரும் உணர்வோடு புறப்பட்டான் சேரன்.

அவையிலிருந்த ஆசான், "வடவர்கள் சோழனையும் பாண்டியனையும் இகழ்ந்தனரே யன்றி நம்மையில்லை என்பதால் 'அமைக நின்சினம்' அமைதிப்படுத்தினாலும்" எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சி தரும் என்று சோழபாண்டியர்களையும் கனகவிசயர்கள் இகழ்ந்ததாகவே கருதி அப்பழியைத் துடைக்கத் தான் ஒருவனாகவே புறப்படுகிறான் செங்குட்டுவன். அதாவது சோழ பாண்டியர்களைக் கூட்டிக் கொண்டு போவதற்குரிய காலம் இல்லாததால் பயணத்தை விரைவுபடுத்தவேண்டிய சூழலில் மூவர்க்கும் ஒருவனாய்ப் புறப்பட்டான்.

வடக்கே வெற்றியடைந்ததற்குப் பிறகு கனகவிசயரைச் சோழ பாண்டியர்க்குக் காட்டிவர நீலன் என்பானை ஏவிய அளவில் சேரன் வஞ்சிமா நகரடைந்தான். ஈண்டு எத்தகைய கனகவிசயரைக் காட்டிவரச் செய்ததாகக் கூறும் இளங்கோ, "அரிஇல் போந்தை அருந்தமிழ் ஆற்றல், தெரியாது மலைந்த கனக விசயரை" - என்றார்.

இமயத் தாபதர்கள் கூறியவறு தமிழ்அரசர்களை ஆரிய மன்னர் இகழ்ந்தனர் என முன்னர் வீரத்தோடேழுந்த செங்குட்டுவன் - ஈண்டு, போந்தை அருந்தமிழ் ஆற்றல் தெரியாது மலைந்த எனச் சேரரின் வீரத்தை மட்டும் இகழ்ந்ததாகப் பிரித்துக்கூறுவானேன். முன்னர் எம்போல் வேந்தர்க்கு என்ற சேரன் பின்னர் எம்போல் இருபெருவேந்தர்க்கு எனக் கூறாமல் வாளா இருபெருவேந்தர் என்றதும் ஏன்? மேலும் தான் பெற்ற வெற்றியை இருவர்க்கும் காட்டிவரச் செய்ததும் ஏன்? கண்ணகிக்குக் கல்லெடுத்தான செய்தி இருபெருவேந்தர்க்குத் தெரிவிப்பதினும் போந்தை (பனம்பூமாலை) ஆற்றலை இகழ்ந்ததையே முன்னிலைப்படுத்திக் கூறச் செய்ததால் சேரரின் முனைப்பு வெளிப்படையாகத் தெரிகிறது எனலாம்.

இந்நுட்பத்தை உணர்ந்தால்தான் சோழ பாண்டியர், சேரனின் வெற்றியை இகழ்ந்தனராம் என்க! இவ்விகழ்ச்சியின் காரணத்தாலேயே கடவுள் மங்கல நிகழ்ச்சியில் சோழ பாண்டியர்கள் வரவழைக்கப்படவில்லையோ? என எண்ணத் தோன்றுகிறது. சிறையிலிருந்து விடுதலைபெற்ற ஆரிய மன்னர்களும் குடகநாட்டுக் கொங்கர்களும் மாளவ நாட்டு மன்னர்களும் இலங்கைக் கயவாகுவும் வந்து வணங்கியதாக இளங்கோ கூறுகிறார். ஆனால் சோழ பாண்டியர் இல்லை.

ஆக முடியுடை வேந்தர் மூவர் ஒற்றுமையைக் குறிப்பால் உணர வைக்கக் காப்பியம் படைக்கப்பட்டதாய் ஆய்வாளர்கள் ஒருவாறு கூறினும் அக்கருத்து சோழ பாண்டியரினும் சேரர்க்குள்ள முனைப்பைத் தலைக்காட்டச் செய்த இளங்கோவடிகளின் எழுத்துக்களால் சிலம்பில் இளங்கோவின் சேரப் பற்றே மிகையாக உள்ளது எனலாம். இதனால் எவர்க்கும் தம் நாட்டுப் பற்றைத் தவிர்த்தல் இயலாது எனத் தெரிகிறது. இதில் முற்றுந்துறந்த இளங்கோவே ஆயினும் அடங்குவர் என்பதே உண்மை!

நலிந்ததே நெற்குப்பை நாற்று

(தமிழாகரர் தெ. முருகசாமி)

நெற்குப்பை தான்பிறந்த நின்றசீர் தமிழண்ணல்
நெற்பயிர் நாற்றாக ஆங்காங்கே நடப்பட்டார்!
மேலைச் சிவபுரியில் மேனாள் தமிழ்கற்றுச்
சீலமுடன் காரைக் குடியில் பணியாற்றி
ஆலை அதிபர் கலைத்தந்தை தியாகராசர்
வேலை தரவே விருப்புடன் மாமதுரைக்
கல்லூரிப் பணிசேர்ந்து பொற்பான காமராசர்
நல்லபெயர் பல்கலையின் தமிழ்த்துறைப் பேராசான்
பணிமுடித்த அண்ணலவர் பயிரான இடத்திலெலாம்
அணிமணியாய் ஆராய்ச்சி அறுவடையாம் விளைச்சலைக்

கற்பார் அனைவர்க்கும் கன்னித் தமிழ்விதையாய்ப்
பொற்புடன் சேமித்தே புதுவிளைச்சல் காணுதற்கும்
எத்தனை ஆராய்ச்சி! எத்தனை நூலாக்கம்!
அத்தனையும் அண்ணலார் இருப்பாக்கிப் புகழ்சேர்த்தார்!
விருதோடு பட்டங்கள் வேண்டா மெனுமளவும்
கருதுமாறு வாழ்ந்திட்டார்! காலமெலாம் புகழ்கொண்ட

குன்றக் குடியோடு கோவிலூர் ஆதீனம்
என்ற திருமடத்தின் தமிழ்த்தொண்டின் துணையாக
உழைத்தபெருந் தன்மையால் ஊர்மெச்ச சீர்பெற்றுத்
தழைத்திட்ட அண்ணலவர் தமிழ்வாழ்வை நினைக்கையிலே
செவ்வியலாம் செந்தமிழ்ச் செம்மொழிப் பூரிப்பில்
கவிவிக் கிடந்தே கனத்தபுகழ் பெற்றிட்டார்!
அவ்வியம் பேசா அருந்தமிழ் அண்ணலவர்
ஒவ்விய வாழ்வை உயர்வாக ஓவியமாய்
நாளும் நினைந்தே நயந்து வணங்கினால்
மூளுமே அன்னாரின் முனைப்புடன் ஆராய்ச்சி
பொலிந்தென்றும் வாழ்ந்திடலாம்! அய்யகோ! அந்தோ!
நலிந்ததே நெற்குப்பை நாற்று!

திருவள்ளுவர் விருதுபெற்ற **தமிழ்மாமுனிவர் தவத்திரு அடிகளார்** அவர்களை வணங்கி வாழ்த்திய பாராட்டு

(கவிஞர். ம. முத்தரசு)

பதினேழு பன்னிரண்டு பதினைந் தாம்நாள்
நாடாளு மன்றத்தின் முடக்கம் நீங்கிய
தலைநகர் தில்லியில் திருக்குறள் முழக்கம்
அலையலை யாய்வரும் திருக்குறள் ஓசை
ஆசை ஆசையாய் அதிசயத் திருவிழா!
உலகத் திருக்குறட் பேரவைத் தலைவர்க்குத்
திலகம் ஆனது வள்ளுவர் விருது
நாடு முற்றிலும் பொதுமறை ஓதிய
பீடுகெழு பெருமான் அடிகளார் தமக்கு
நாடாளு மன்றத்தில் கொற்ற மங்கலம்
ஏடும் இதழ்களும் எட்டுத் திசையிலும்
குன்றக் குடியின் திருப்புகழ் இசைத்தன
அடிகளார்
வாய்வே தாந்தம் பேசும் வையத்தில்
தாயருள் சுரக்கும் சைவசித் தாந்தி
எழுத்திலும் பேச்சிலும் திருக்குறள் இலக்கியம்
பழுத்துக் குலுங்கும் பழமுதிர் சோலை
குறள்நெறி பயிற்றும் கல்விச் சாலை
துறவறம் என்பது தொண்டுக் கேஎன
உறவுகொண் டுலவும் தென்றல்நம் அடிகளார்
அரங்கே றித்தமிழ் அமுதம் பொழிவதில்
உரைவளம் காட்டும் புகழ்மிகு நாவலர்
மக்கள் சிந்தனை வளர்க்கும் நாயகர்
தக்கவர் கொண்ட தவவாழ்வின் இலக்கணம்
நாக ரிகத்தின் குறிப்பு வினைமுற்று
ஆதரித் தணைப்பதில் தெரிநிலை வினைமுற்று
***பொன்னம் பலமவர்** பொதுமறை அம்பலம்,*
என்றென்றும் குன்றாத் தமிழ்மா முனிவரின்
செந்தமிழ் நோக்கிய திருக்குறட் பயணம்
தொடரும் - துலங்கும் - வளரும் - வளம்பெறும்
வரலா றாகி வாழும்நூ றாண்டே!

உலகத் திருக்குறள் பேரவை – தூத்துக்குடி


உலகத் திருக்குறள் பேரவை தூத்துக்குடி கிளையின் மாதாந்திர கருத்தரங்கம் தூத்துக்குடி சி.எம். மேனிலைப்பள்ளியில் திருக்குறள் உரையாசிரியர் வாய்மை தலைமையில், காமராசு கல்லூரி முன்னாள் பேராசிரியர் கந்தசாமி, மதுரை கருவூல அலுவலக உதவி இயக்குனர் கணேசன் முன்னிலையில் நடைபெற்றது.

உலகத் திருக்குறள் பேரவையின் மாவட்டச் செயலாளர் திருக்குறள் மோ.அன்பழகன் வரவேற்றுப் பேசினார்.

ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேலு குறளுரை வழங்கினார். தூத்துக்குடி தொழில்நுட்பக் கல்லூரியின் முன்னாள் துணை முதல்வர் பொறியாளர் தபராசு சித்தர்களின் பாடல்கள் பற்றிப் பேசினார். காமராசு கல்லூரி முன்னாள் கணிதத்துறை பேராசிரியர் குமரிக்கண்ணன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் குறித்து உரையாற்றினார்.


கூட்டத்தில் மகாலெட்சுமி கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் குருலெட்சுமி, ஆசிரியர்கள் மனோசேவியர், அருமைநாயகம், தேவிகா, கனகலெட்சுமி, சுந்தரி, புரவலர் தனபாலன், அண்ணாமலை, செயசிங், முருகையா, தனபால், சுந்தரேசன், கணேசன், வான்மதி, வெள்ளத்தாய், தணிகா மற்றும் பேரவை உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

பொற்கிழிக் கவிஞர் பேராசிரியர். சவகர்லால் நன்றி கூறினார்.



"மக்கள் சிந்தனை"
அன்பர்களுக்கும், வாசகர்களுக்கும்
இனிய புத்தாண்டு – பொங்கல் வாழ்த்துக்கள்

– ஆசிரியர்



உலகத் திருக்குறள் பேரவை

தலைமையிடம் : குன்றக்குடி

கிளை : தூத்துக்குடி மாவட்டம்

மாவட்டக் கிளையின் புதிய நிர்வாகிகள்

தலைவர் : திரு.ஆ. திருச்சிற்றம்பலம்

துணைத் தலைவர்கள்

1. பொற்கிழிக் கவிஞர் பேராசிரியர் ச. சவகர்லால்
2. பேராசிரியர் செ.சு. கந்தசாமி
3. திரு. து. கணேசன்

செயலாளர் : திருக்குறள் மோ. அன்பழகன்

துணைச் செயலாளர்கள்

1. ஆசிரியர் க. தேவிகா பொன்னம்பலம்
2. திரு. சக்திவேலு
3. ஆசிரியர். மனோசேவியர்

பொருளாளர் : கோ. பாலசுப்பிரமணியன்

பொதுக்குழு உறுப்பினர் : அரு. அ.சீ. தனபாலன்

புரவலர்கள் :

1. பேராசிரியர். சு. அழகேசன்
2. திரு. பா. செல்வராமன்
3. பேராசிரியர். குமரிக்கண்ணு

தண்ணார் தமிழ்புரந்த தமிழண்ணல் நினைவு

கையறுநிலை

(புலவர் தா. குருசாமி)

தமிழகத்தின் வரலாறு தொகுத்தளித்த தமிழண்ணல்
தமிழ்காக்கும் தளபதியாய் விளங்கியவர்! தமிழ்ப்படையின்
தமிழ்த்தலைவர்! வேதங்கள் ஆகமங்கள் நுட்பத்தை
தமிழர்பலர் உணர்வதற்கு சிறுநூல்கள் வெளியிட்டே
அமிழ்தெனவே கற்றோர்க்கும் மற்றோர்க்கும் உணர்த்தியவர்!
ஆன்மீகம் எனச்சொல்லி அற்புதங்கள் காட்டிவந்த
தமிழ்படித்தார் பலருக்கும் விழிப்பீந்த வள்ளலவர்
தமிழ்த்தாயின் தலைமகனார்! தலையற்றோம்
என்செய்வோம்?

நகரத்தார் செய்ததொண்டு நாடறியும் அக்குலத்தில்
நாடறிந்த செல்வர்பலர் இருந்தாலும் நற்செல்வர்
அகரம்போல் முன்னிற்கும் தமிழண்ணல் கற்றுசெய்தி
ஆரவார உரைகளிலே போகாமல் குறள்போலப்
பகர்ந்தெங்கும் ஓய்வுகளைச் சிறுநூலில் கருத்தீந்தே
பாமரர்கள் ஏமாறாமலிருப்பதற்கே வழிவகுத்தார்!
சிகரம்போல் உயர்ந்தெங்கும் உரைக்காத உண்மைகளைச்
சிறுதெய்வக் கோயிலார்க்கும் சிந்தனையைக்
கொண்டுவந்தார்!

சின்னக்க ருப்பர்பலர் இருந்தாலும் நம்பெரிய
கருப்பர்தான் தமிழண்ணல் பெயர்தரித்தார் அப்பெயரும்
பின்னமிலாத் "தமிழ்ச்"சொக்கர் அண்ணலென அமைந்ததாகும்!
பெருமைமிகு தமிழ்ப்பணியில் தொல்காப்பிய நூலொன்றே
அன்னவரின் பெயர்சொல்லும்? தமிழாய்ந்த தலைமக்கள்
அனைவருமே பாராத பார்வையிலே சென்றிங்கே
மன்னவனார் மக்களுக்கு உபதேசம் பலஈந்தார்!
மறைந்தாலும் மறையாமல் நூல்களிலே வாழ்கின்றார்!

ஆலயங்கள் அனைத்துந்தான் நம்பிக்கை இல்லாமல்
அருங்காட்சி அகமாகி விட்டதென்பார்! மேன்மேலும்
சாலவுமே தமிழ்மறைகள் ஊடகத்தில் ஒலிக்காமல்
சாற்றுகிற அர்ச்சனைகள் எதற்காக எனக்கேட்டே
மேலால்நாம் கோயில்களைப் பயன்படுத்த என்செய்தோம்?
மேன்மைதரும் சாத்திரங்கள் தோத்திரங்கள் படிக்காமல்
ஏலமிட்ட நீரருந்தி என்செய்ய? எனக்கேட்டார்!
ஏமாறும் தமிழனுக்கு விடிவென்றோ? எனவருந்தி

தமிழகத்தை ஆள்பவர்க்கும் ஆள்பவரை எதிர்ப்பவர்க்கும்
தரித்திரமே இல்லாமல் தகவுரைகள் பலசொல்வார்!
தமிழண்ணல் தமிழ்த்துறையில் இருந்தவர்தான் இருந்தாலும்
தமிழ்வாழ்வார் போலின்றி போராளி போலாகி
தமிழகத்தில் வரதர்போல் சிலர்துணையால் கர்ச்சிப்பார்!
தமிழின்று எங்குமில்லை சிவமயமும் எங்குமில்லை!
தமிழண்ணல் வாழ்வுநெறி காப்பியமும் வள்ளுவரும்!
தமிழண்ணல் இறந்தாலும் இருக்கின்றார் நம்மிடையே!

பலதமிழர் இருந்தாலும் இறந்தவராய் ஆய்விட்டார்?
பன்னாட்டில் வாழ்கின்ற தமிழர்எல்லாம் வாழ்ந்தொளிர
சிலரேனும் முயல்கின்றார் சில்லோரில் தமிழண்ணல்
செந்தமிழின் வாளேந்தி நிற்பவராம்! அன்னவரின்
பலகருத்து நூல்வடிவில் தரும்ஒளியில் நம்மக்கள்
பேதைமைகள் விட்டொழித்தே இறைபெயரைச்
சொல்லியெங்கும்
அலைக்கின்ற அலைவுகளை படிப்படியாய் விட்டொழிப்பார்!
அண்ணலவர் புகழ்வாழ்க! பகுத்தறிவர் வாழ்க! வாழ்க!

கண்ணீரை துடைப்பவன் நமது வாழ்வின் உற்ற நண்பனன்று.
நாம் கண்ணீர் விடாமல் பார்த்துக் கொள்பவனே உற்ற நண்பன்.
– எஃப்டி

சிறப்பாசிரியருக்கு வந்த கடிதங்கள்....

தங்களுக்கு வாழ்நாள் திருவள்ளுவர் விருது வழங்கி கௌரவிப்பதை எண்ணி மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

– S. கந்தசாமி, சென்னை

நாடாளுமன்றத்தில் நடமாடும் திருக்குறள் விழா, நாவீறு பெற்ற குன்றக்குடி முனிவருக்கு முடிசூட்டுவிழா, எங்கள் சிந்தை சிலிர்க்கிறது. மூச்சுக்கு மூச்சு பெருமை மணக்கிறது. தமிழகம் முழுவதும், தலைகுனிந்து வணங்குகிறது. பாகாக இனிக்கும் பைந்தமிழ்நாடு வீறுநடை சேர்க்கும். திருக்குறள் விளக்கம் இனி, வீதியெல்லாம முழங்கும்.

வாழிய எங்கள் முத்தமிழ் மாமுனிவர்!
வளமும் புகழும் பெறுக அவர்தம் வாழ்க்கை!
வாழ்க திருக்குறள்! வளர்க குறள் நெறி!

–கவிஞர். ம. முத்தரசு, இராசபாளையம்

நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில் திருவள்ளுவர் – மக்கள் விழிப்புணர்வு விருது வழங்கிய நிகழ்வை தொலைக்காட்சி மூலம் கண்டு மிகவும் மனம்பூரித்து மகிழ்ந்தோம்.

நம் இதயங்களில் குடியிருந்து இறைவனாக வழிகாட்டும் நம் மகாசந்நிதானத்தின் முக்கிய அறிவுரைகளும் தலைசிறந்தது. "கல் – சிந்தி – செயல்படு" – "உழை – பிழை – நிலை" என்ற கோட்பாட்டின் வழியே எங்களை வழிநடத்திச் செல்லும் – மகாசந்நிதானம் அவர்கள் மேன்மேலும் பலவிருதுகளைப்பெற்று, உலகமக்கள் மகிழ்வடையவும், பக்தியிலும் பண்பாட்டிலும் தமிழகம் மேன்மேலும் உயரவும், குறள்நெறி குவலயம் முழுதும் செழிக்கவும் பாடுபட்டு உயர்த்த வேண்டும் என்பதே பிரார்த்தனை!

மகிழ்ச்சி! பூரிப்பு... குடும்பமும் – நட்பும் குதூகலத்துடன் வணங்கி மகிழ்கிறோம்...

– நா. பாலசுப்பிரமணியன், கொத்தமங்கலம்

சந்நிதானத்தில் புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் "திருக்குறள் பற்றிப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்கான விருது" வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்ட செய்தி நேற்று தொலைக்காட்சிகளிலும், இன்று நாளிதழ்களிலும் கண்டு

உவந்தேன். மகிழ்ச்சியையும், மனமார்ந்த பாராட்டுகளையும் திசைநோக்கிச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

திருக்குறள் பேரவை நிறுவி அருந்தொண்டாற்றிய போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும் உரிய அருள்நெறித்தந்தை அவர்கள் வழியில் அவர்கள் காட்டிச்சென்ற நெறியில் சைவசமயத்திற்கும், தமிழுக்கும் அயராது பணி செய்யும் எங்கள் சந்நிதானத்தின் உழைப்புக்குக் கிடைத்த சிறந்த பரிசாகக் கருதி மகிழ்கின்றேன். சந்நிதானத்தின் பணிகள் தழைக்க சண்முகநாதப் பெருமான் தண்ணருள் நல்கப் பிரார்த்திக்கின்றேன்.

– கவிஞர். மு.சு. சங்கர், திருநெல்வேலி

தாங்கள் குருமகாசந்நிதானத்தின் வழி தொடர்ந்து ஆற்றிவரும் திருக்குறள் பணியைப் போற்றும் வகையில் தில்லி நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து மாநிலங்களவை உறுப்பினர் தருண் விஜய் அவர்கள் நடத்திவரும் திருவள்ளுவர் மன்றங்கள் இளைஞர் மன்றங்கள் சார்பில் திருக்குறள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்காக வழங்கப்படும் விருது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியும் பாராட்டுதலையும் குன்றக்குடி அருள்தரும் சண்முகநாதனையும் குருமகாசந்நிதானத்தையும் வணங்கி போற்றித் துதித்து திருவடிகளுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

குருமகாசந்நிதானத்தின் அருளாசியோடு அருள்தரும் சண்முகநாதனின் அருட்கடாட்சத்தோடும் இன்னும் பல்வேறு விருதுகளைப் பெற்று வள்ளுவத்தை வாழ்வியல் ஆக்கும் பணியில் தொடர்ந்து அருளாசி வழங்கி எங்களைப்போன்ற குருமகாசந்நிதானத்தால் தொடங்கி நடந்துவரும் திருக்குறள் மன்றங்களின் சேவை தொடர பணிந்து வணங்கி மகிழ்ச்சியினை சமர்ப்பிக்கின்றேன்.

– முனைவர். இ.மா. இராமச்சந்திரன், அம்பாசமுத்திரம்

தங்களுக்குத் "திருவள்ளுவர் மக்கள் விழிப்புணர்வு விருது" வழங்கிச் சிறப்பித்துள்ள செய்தி அறிந்தோம்.

விருதாளரான தங்கட்கு எங்களுடைய நெஞ்சார்ந்த பாராட்டும் வாழ்த்தும் உரித்தாகுக. –முனைவர். இ.கி. இராமசாமி, மதுரை.

17.12.2015 சன் டிவி நிகழ்ச்சியில், 133 மாணவர்களோடு தாங்கள், கவியரசு, குரூஸ் போன்றவர்கள் பட்டம் பெற்ற நிகழ்ச்சியை பார்த்து பரவசம் அடைந்தேன்.

"எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்பதைப் போல இருந்தது.

மீண்டும் திருவள்ளுவர் தோன்றினாரோ என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது.

தங்களுக்கு கிடைத்த பெருமை தமிழகத்திற்கே கிடைத்த பெருமையாக கருதுகிறேன்.

டில்லியில் இந்த விழாவை நடத்திய சான்றோரை வணங்குகிறேன்.

– **க. முத்தழகு**, கருவலூர்

திருவள்ளுவர் விருதைப்பெற்று மத்திய அமைச்சர் திருமதி. ஸ்மிருதி இராணி, திரு. தருண்விஜய், ஆகியோரால் பாராளுமன்ற வளாகத்தில் பாராட்டுப் பெற்றமையைத் தொலைக்காட்சி வழியாக நான் பார்த்து மகிழ்ந்தேன். தாங்கள் மேன்மேலும் பல்வேறு வகைகளில் உயரிய விருதுகளைப் பெறுவதற்கு இறைவன் அருள்புரிவானாக.

–பேராசிரியர். **சு. சக்திவேலு**, சிவகிரி

தங்களுக்கு சென்றவாரம் திருவள்ளுவர்குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்காக டெல்லியில், திருவள்ளுவர் அமைப்பின் தேசியத்தலைவர் திரு. தருண்விஜய் அவர்களால் ஏற்பாடு செய்யட்ட விழாவில் Thiruvalluvar Mass Awakening Award வழங்கப்பட்டது அறிந்து பூரிப்படைந்தேன். இன்னும்பல விருதுகள் பெறவும் தொடர்ந்து திருக்குறள் நெறி பரப்பவும் இறையருளைச் சிந்திக்கின்றேன். விழாவில் தாங்கள் ஆற்றிய உரையை நமது இதழில் பிரசுரித்தால் பயனுள்ளதாய் இருக்கும்.

– **செ. சுபாஷ்**, புதுவலவு வெள்ளித்திருப்பூர்

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் 17.12.2015 அன்று நடைபெற்ற திருக்குறள் திருவிழாவில் திருப்பெருந்திரு குருமகாசந்நிதானம் அவர்களுக்கு "திருவள்ளுவர் மக்கள் விழிப்புணர்வு விருது" வழங்கப்பட்டதறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தோம்.

திருவள்ளுவர் மக்கள் விழிப்புணர்வு விருது பெற்ற திருப்பெருந்திரு குருமகாசந்நிதானம் அவர்களின் திருக்குறள் பணி மேன்மேலும் சிறக்க

எனது சார்பிலும், நமது பள்ளி நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைமையாசிரியர், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரின் சார்பிலும் எங்களது பாராட்டுதலையும் நல்வாழ்த்துக்களையும் மிக்க மகிழ்ச்சியுடன் திருப்பெருந்திரு குரு மகாசந்நிதானம் அவர்களை வணங்கி தெரிவித்துக்கொள்கிறோம்.

– பா. ரவிக்குமார், அம்மன்பேட்டை

பெருமதிப்புக்கும் பேரன்புக்குமுரியவர்களே! வணக்கம். டெல்லியில் நடந்த விழாவில் "திருவள்ளுவர் மக்கள் விழிப்புணர்வு விருது"பெற்ற தாங்கட்கு எனது இதயங்கனிந்த இனிய நல்வாழ்த்துக்கள்.

தாங்கட்கு மேன்மேலும் விருதுகள் கிடைக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

– பெ. ஜெயப்பிரகாசம், உறையூர்

சுவாமிகள் டெல்லி திருக்குறள் விழாவில் கலந்து கொண்டதையும் விழாவில் தங்களுக்கு விருது அளிக்கப்பெற்றதையும் தொலைக்காட்சி செய்திகள் மூலம் அறிந்தேன். பெரிதும் மகிழ்ச்சி அடைந்தேன். சுவாமிகளுக்குப் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

– புலவர். **மூ.ச. சுப்பிரமணியன்**, மூங்கில்தோட்டம்

சந்நிதானம் அவர்களின் திருக்குறள் திறனறிந்து சிறப்பித்து "திருக்குறள் விழிப்புணர்வு" சிறப்புப்பட்டம் பெற்ற சந்நிதானம் அவர்களை வணங்குகிறேன்.

"மாபெரும் சபைதனில் நீநடந்தால்
மாலைகள் விழ வேண்டும் – ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன் நீஎன்று
போற்றிப் புகழ வேண்டும்"

என்ற கவியரசு வரிகளை மெய்ப்பித்த தவத்திரு சந்நிதானம் அவர்களைப் போற்றி வணங்குகின்றேன்.

ஆன்றவிந்தடங்கிய அறிவுச் சான்றோராம் சந்நிதானம் அவர்களின் புலமை அறிந்து பட்டம் வழங்க ஏற்பாடு செய்த திருக்குறள் அனுதாபி உத்திரகண்ட் மாநில மேலவை உறுப்பினர் திருமிகு. தருண்விஜய் அவர்களுக்கு என் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். – குன்றக்குடி **பெருமாள்**

பெறுதலுக்கரிய "திருவள்ளுவர் விருதினை" ப் பெறும் பேற்றினை தாங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்று கேள்வியுற்றபோதும், தொலைக்காட்சி நிகழ்வினை கண்டுகளித்த போதும் நான் அடைந்த ஆனந்தத்தை வார்த்தையில் வடிக்க இயலாது. இறைவனின் ஆசியினை பரிபூரணமாகப் பெற்றிருக்கும் தங்களுக்கு மேன்மேலும் சிறப்புகள் குவியவேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

106.4 F.M. வானொலியில் காலைப்பொழுதில் தங்களின உரையினை கேட்டு மகிழ்வுற்றேன். அற்புதமான அருமையனஉரை. ஒருசில நிமிடங்களில் சுருங்கச்சொல்லி விளங்கவைப்பது உங்களைப் போன்றோர்க்கே சாத்தியம். திருவெம்பாவையில் துவங்கி, கண்ணதாசன், பட்டுக்கோட்டையார் வரிகளை உவமைகாட்டிப் பேசியிருக்கிறீர்கள். தலைமைப் பண்பினைப்பற்றியும், யான் எனது என்பது குறித்தும் சிறு கதைகளைச் சுட்டிக்காட்டி பேசியிருப்பது கேட்பவர் மனதில் பசுமரத்தாணி போல் அமைந்துவிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இம்மாதம் முழுவதும், தங்களுடைய குரலை கேட்கும், அன்னவரும் நிச்சயம் நலம் பெறுவர்.

– A.P.C.V. **சொக்கலிங்கம்,** தூத்துக்குடி

சாதி, மதம் கடந்து சமயமும் மொழியும் இரண்டறக்கலந்து மக்களுக்குத் தொண்டு செய்து வருகின்ற தங்களின் தொண்டும் நீடு புகழ் பெற இறையருள் வேண்டுகிறோம். புகழ் கண்டு பெருமிதம அடைகிறோம்.

திருக்குறள் என்ற வேதநூல் இருப்பதால்தான் உலகத்தில் இந்தியா, தமிழகம் – தமிழ்மொழி இருக்கிறது என்பது தெரியவருகிறது. தமிழகத்தின் பெருமையும் தமிழின் உயர்வும் உலகளவில் தெரிகிறது.

அந்த வகையில் அனைத்து மக்களும் அறிந்து கொள்ளும்படி – புரிந்து கொள்ளும்படி திருக்குறளின் பெருமையைப் பரப்பி – மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக தங்களுக்கு விருது வழங்கியது கண்டு பெருமிதம் அடைகிறோம். தங்கள் தொண்டு மக்களுக்குத் தேவை!

வாழ்க அடிகளார் புகழ்! வளர்க அவர்கள்தம் திருக்குறள் தொண்டு!

அ. செல்லையா, எம்.ஏ.பி.எட்., புதுக்கோட்டை

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி

பரிமள விலாஸ்

S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்


தொலைபேசி எண் : 04577 – 264227

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி


No one is
too poor to
bank with us

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-January 2016

Price Rs. 8-00
Date of Publication 15-01-2016





பெறுநர்

திரு ______ திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்,
கோவிலூர்,
மானகிரி-(அஞ்சல்),
காரைக்குடி-(வழி), ______ அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166